# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:13 வள்ளுவர் ஆண்டு2029 சித்திரை 24(7-05-1998) வியாழக்கிழமை UTHAYAN– Ahivaly National Tamil Daily கதிர்:137



-6 MAY 1998


# ஐ.நா.செயலரின் பிரதிநிதி இன்று புலிகளுடன் பேச்சு!

## மாலையில் வவுனியா திரும்புவார்

வவுனியா, மே 7

இலங்கை வந்துள்ள ஐ. நா. செயலரின் விசேட பிரதிநிதியான – ஒலரா ஒட்டுணு நேற்றுப் பிற்பகல் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பகுதிக்குப் போய்ச் சேர்ந்தார்.

இன்று வன்னியில் புலிகளின் பிரதிநிதிகளுடன் அவர் பேச்சுக்கள் நடத்துவார்.

நேற்று முற்பகல் 11. 00 மணிக்கு வவுனியாவுக்கு வந்துசேர்ந்த அவர் வவுனியா இராணுவத் தளத்தில் படை அதிகாரிகள் மற்றும் பொலீஸ் அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

விடுதலைப்புலிகளின் தாக்குதல் தவிர்ப்பு அறிவிப்பு, பாதுகாப்பு நிலைவரம் உட்பட பலவிடயங்கள் தொடர்பாக அவர் அங்கு கலந்துரையாடியதாகத் தெரியவந்தது.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் வவுனியா அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடலிலும் அவர் பங்குபற்றினார்.

அரச திணைக்களத் தலைவர்களுடன் அங்கு அவர் கலந்துரையாடி விவரங்களைப் பெற்றுக் கொண்டார்.

அதன் பின்பு யுனிசெவ் அமைப்பு, அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் ஆகியவற்றின் அதிகாரிகள் சகிதம் அவர் மூன்று வாகனங்களில் அங்கிருந்து புறப்பட்டு நேற்று மாலை மடுவை அடைந்தார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

### ஜனாதிபதியை நாளை சந்திப்பார்

கொழும்பு, மே 7

இலங்கை வந்துள்ள ஐ. நா செயலரின் விசேட பிரதிநிதி ஒலரா ஒட்டுணு நாளை இரவு எட்டு மணிக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை சந்திக்கவிருக்கிறார்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தி இன்று வவுனியா திரும்பும் அவர் அங்கு பொதுமக்களுடன் கலந்து பேசிவிட்டு இன்றிரவு கொழும்பு திரும்பி அமைச்சர்கள், அரச சார்பற்ற அமைப்புப் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்த பின்னர் ஜனாதிபதியை நாளை சந்திக்கின்றார். (உ-3)

## விபத்தில் சிப்பாய் பலி!

யாழ்ப்பாணம், மே 7

புத்தூர் சோமாஸ்கந்தாக் கல்லூரி அருகில் இடம்பெற்ற லொறி – மோட்டார் சைக்கிள் விபத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்.

கடந்த 4 ஆம் திகதி மோட்

(10ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியத் தூதரக அதிகாரி அடுத்த வாரம் வருவார்

யாழ்ப்பாணம், மே 7

யாழ். மாவட்ட தள நிலைமை குறித்து நேரில் ஆராய கொழும்பில் உள்ள இந்திய தூதரகத்தின் அரசியல் துறை கவுன்ஸிலர் சச்சதேவ் ராஜேஸ்குமார் எதிர்வரும் 13 ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகிறார்.

மூன்று தினங்கள் இங்கு தங்கியிருக்கும் இவர் யாழ். செயலகம், யாழ். ஆஸ்பத்திரி, பல்கலைக்கழகம் உட்படப் பல இடங்களுக்குச் சென்று அங்குள்ள நிலைமைகள் குறித்து கேட்டறிவார்.

1989 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இந்திய அமைதிப் படையினர்நிலைகொண்டிருந்த காலத்துக்குப் பின்னர், யாழ்ப்பாணத்துக்கு இந்திய தூதரக அதிகாரி உத்தியோக பூர்வமாக விஜயம் செய்வது இதுவே முதல் தடவையாகும். (உ-3-5)

## செட்டிகுளத்தில் நேற்று

# சப். இன்ஸ்பெக்டரும் இருபொலீஸாரும் பலி!

வவுனியா செட்டிகுளத்தில் ஜயலத்புர என்னும் இடத்தில் நேற்று நண்பகல் 12.40 மணியளவில் விடுதலைப் புலிகள் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் சப். இன்ஸ்பெக்டர் ஒருவர் உட்பட மூன்று பொலீஸார் உயிரிழந்தனர் என படை வட்டாரங்கள் தெரிவித்தன.

அப்பகுதிக்குச் சென்ற பொலீஸாரின் பவுஸர் ஒன்று நிலத்தில் புதையுண்டதாகவும்—

அந்தப் பவுஸரை மீட்க டிராக்டர் ஒன்றில் சென்ற பொலீஸார் மீதே புலிகள் தாக்குதல் நடத்தியதாகவும் —தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலில் சப். இன்ஸ்பெக்டர் அமரபதி, கான்ஸ்டபிள்களான அஜித்குமார, டி. எம். செனவிரத்தின ஆகியோர் உயிரிழந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டது. (உ-164-3)

## ஷெல் தாக்கு

சாவகச்சேரி, மே 7

எழுதுமட்டுவாழ் வடக்குப் பகுதியில் கடந்த சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணி அளவில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் ஒன்று இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த மோதலையடுத்து மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலின் போது படித்த மகளிர் குடியேற்றத் திட்டப் பகுதியில் வீழ்ந்த ஷெல்லால் பெறுமதிமிக்க மாடு ஒன்று துடிதுடித்து இறந்தது. (உ-31)

## அகோரவெப்பம் காரணமாக

# திருமலை பாடசாலைகள் பி.ப.1 மணிவரை மட்டுமே!

திருகோணமலை மாவட்டத்தில் நண்பகலில் கடும் வெப்பம் நிலவுவதை அடுத்து மாவட்டத்தில் உள்ள பாடசாலைகள் அனைத்தும் இன்று முதல் நண்பகல் 1.00 மணியுடன் மூடப்படும் என அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

எதிர்வரும் 18 ஆம் திகதி வரை பாடசாலைகள் நண்பகல் 1. 00 மணியுடன் மூடப்படும் என்றும் —

பின்னர் நிலைவரத்தைப் பொறுத்து நேரத்துடன் பாடசாலைகளை மூடும் நடவடிக்கை நீடிக்கப்படும் என்றும் —

மாகாணக் கல்வி அமைச்சின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சுகாதார சேவைத்திணைக்களம் வழங்கிய ஆலோசனையின் பேரில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டிருப்பதாகவும்—

இலங்கையில் அதிக வெப்ப நிலை பதிவாகும் இடங்களின் பட்டியலில் இரண்டாவது இடத்தில் திருகோணமலை இருப்பதாகவும் —

மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-21)

# தாக்குதல் தவிர்ப்பை மீறியுள்ளதாக புலிகள் மீது அரசு குற்றச்சாட்டு!

கொழும்பு, மே 7

ஐ. நா. செயலரின் விசேட பிரதிநிதி ஒலரா ஒட்டுணுவின் வன்னி விஜயத்தையொட்டி புலிகள் அறிவித்த தாக்குதல் தவிர்ப்பை நேற்று இரு தடவைகள் அவர்களே மீறிவிட்டதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றுக்காலை 10மணியளவில் மாங்குளம் பகுதியில் ''வெற்றி உறுதி'' படையினர் மீது புலிகள் மோட்டார் தாக்குதலை மேற்கொண்டனர். இதனால் படைத் தரப்புக்கு சேதம் ஏற்படவில்லை.

நேற்று நண்பகல் 11.30 மணியளவில் செட்டிக்குளம் பகுதியில் மல்வத்துஓயாவில் இருந்து குடிதண்ணீர் எடுக்கச் சென்ற பொலீஸார் மீது புலிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். அதில் மூன்று பொலீஸார் கொல்லப்பட்டனர்.

விடுதலைப்புலிகள் இவ்விரு தாக்குதல்களையும் மேற்கொண்டதன் மூலம் தாக்குதல் தவிர்ப்பை மீறியுள்ளனர் — இப்படி பாதுகாப்பு வட்டாரங்கள்தெரிவித்தன. (உ-3-10)

## அரசு இணங்காததால்

# புலிகள் மீறியதாகக் கருத முடியாது

## சிங்கள செய்தியாளர் கருத்து

கொழும்பு, மே 7

விடுதலைப் புலிகள் ஒரு தலைப்பட்சமாகவே தாக்குதல் தவிர்ப்பு அறிவிப்பை வெளியிட்டனர். ஆனால் அதற்கு உடன்பட அரசு மறுத்துவிட்டது.எனவே புலிகள் தாக்குதல் தவிர்ப்பை மீறியதாகக் கருத முடியாது.

வவுனியாவிலுள்ள சிங்களப் பத்திரிகைச் செய்தியாளர் ஜினசேன ரத்துகமகே மேற்கண்டவாறு பி. பி. ஸி. சிங்கள சேவைக்குத் தெரிவித்தார்.

ஐ. நா. செயலரின் விசேட பிரதிநிதி ஒலரா ஒட்டுணு நேற்றுக் காலை வவுனியாவுக்கு வந்த ஒரு மணி நேரத்திலேயே புலிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## கொள்கலனிலிருந்து எழுந்த

# புகைமூட்டம் நேற்று கொழும்பில் பரவியது

கொழும்பு, மே 7

கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டிருந்த சமயம் கடந்த ஞாயிற்றுக்கிழமை தீப்பிடித்த இந்தியக் கப்பலான 'ராஜீவ் காந்தி'யில் இருந்து மீட்கப்பட்ட கொள்கலன்களில் இருந்து எழுந்த புகை மூட்டம் கொழும்புநகரில் நேற்றிரவு பரவியது.

இந்தக் கப்பலில் எடுத்துவரப்பட்ட இரசாயனப் பொருள்களில் தீப்பிடித்ததையடுத்து, எஞ்சிய பொருள்கள் இருந்த கொள்கலன்கள் கப்பலில் இருந்து இறக்கப்பட்டு கொச்சிக்கடைப்பகுதியில் களஞ்சியப் படுத்தப்பட்டிருந்தன.

அந்தக் கொள்கலன்களில் இருந்து நேற்று மாலை 6.00 மணிக்கு எழுந்த புகைமூட்டம் கொழும்பு நகரின் பல பகுதிகளில் பரவியதாகத் தெரிவிக்கப்பட்டது.

சல்பூரிக் அமிலமே அந்த கொள்கலன்களில் இருந்தது என்றும்—

அதில் இருந்து எழுந்த புகை நஞ்சுத்தன்மை வாய்ந்ததாக இருக்கவேண்டும் என்றும்—

இதனால் மக்களுக்குப் பாதிப்பு ஏற்படும் என்றும் — சுட்டிக்காட்டப்படுகிறது.

## பாரதிபுரம் படுகொலைகள்

# 21 பொலீஸாருக்கும் தொடர்ந்து பிணைமறுப்பு

திருகோணமலை, மே. 7

திருகோணமலை தம்பலகமம் பாரதிபுரத்தில் எட்டுத் தமிழர் கொலை தொடர்பாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள 21 பொலீஸாருக்கும் பிணை வழங்க திருகோணமலை நீதிவான் பி. சொர்ணராஜ் மறுத்துவிட்

(10 ஆம் பக்கம் பார்க்க)


இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## லீனப்பு மனுவல்பிள்ளை

(கனகரட்ணம்)

(இளைப்பாறிய கமநலசேவை உத்தியோகத்தர், உரிமையாளர், ரத்தினா ஸ்ரோர்ஸ்)

இல. 287, பாங்சால் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த லீனப்பு மனுவல்பிள்ளை 30-04-98 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நீற்றா பிலோமினாவின் அன்புக் கணவரும், காலஞ் சென்ற திரு. திருமதி மனுவல்பிள்ளை அந்தோனியாப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற திருமதி தங்கரெட்ணம் யோஷேப்பின் அன்புச் சகோதரரும், காலஞ் சென்ற திரு. திருமதி P. S. சின்னத்துரை (அண்ணாவியார்) றெஜீனா தம்பதிகளின் அன்பு மருமகனும், நவரெட்ணராஜா (உரிமையாளர், ரத்தினா ஸ்ரோர்ஸ்), சியாமளா, சுரேஷ் (நோர்வே), பவானி (நோர்வே) ஆகியோரின் அன்புத்தந்தையும், அஞ்சலீனா, கிரிஸ்ரி (சவூதி), கீதாஞ்சலி (நோர்வே), மரியநாயகம் (நோர்வே) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற சண்ஜீவ் மற்றும் ஜெயந்தா (திருக்குடும்பக் கன்னியர் மடம்), ரிபூசியஸ் கஜேந்திரன் (பரியோவான் கல்லூரி), லக்ஷிகா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), பிரியா (நோர்வே), பவித்திரன் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து இன்று (07-05-1998) வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் (புதியநேரம்) புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்:
வீ. நவரெட்ணராஜா
(மகன்)

(55784)

---

திருமதி

## நவரத்தினசாமி கமலாவதி

மாதனை, பருத்தித்துறையை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி நவரத்தினசாமி கமலாவதி 29-4-98 இல் கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நவரத்தினசாமியின் அன்பு மனைவியும், கலையரசி, கமலநாதன் (பிரான்ஸ்), இன்பநாதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கனகசபை, இராமச்சந்திரனின் அன்பு மாமியாரும், ஜெயந்தன், தனஞ்சயன், தமயந்தி ஆகியோரது அருமைப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 7-5-98 இல் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பருத்தித்துறை கோரியடி மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. இராமச்சந்திரன்
(மருமகன்)

மாதனை,
பருத்தித்துறை.

(55811)

---

பிரம்மஸ்ரீ

## சி. சச்சிதானந்தக்குருக்கள்

மயிலணி சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பிரம்மஸ்ரீ சிவசுப்பிரமணியக்குருக்கள் சச்சிதானந்தக்குருக்கள் 5-5-98 அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் மகேஸ்வரியம்மாவின் அன்புக் கணவரும், ஆனந்தவல்லி, பஞ்சாட்சரசர்மா (மட்டக்களப்பு), பாஸ்கரன் (ஆஸ்திரேலியா), இராஜமோகன் (அளவெட்டி—மல்லாகம் ப.நோ.கூ.சங்கம்), இராஜகாந்தன் (ஜேர்மனி), குகநேசன், ஜெயந்தி ஆகியோரின் தந்தையாரும், காலஞ்சென்ற சி. சர்வேஸ்வரக் குருக்களின் அன்புத் தம்பியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 6-5-1998 புதன் கிழமை மயிலணியில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

மயிலணி,
சுன்னாகம்.

(சி/3674)

---

## இராமலிங்கம் தங்கம்மா

நுணாவில் மேற்கு மடத்தடியைச் சேர்ந்த இராமலிங்கம் தங்கம்மா 06-05-98 இல் காலமானார்.

இவர் காலஞ் சென்ற இராமலிங்கத்தின் அன்பு மனைவியும் சிவயோகம், கமலாம்பிகை, அம்பிகாபதி (இ. போ. ச. யாழ்) மகேந்திரன், புலேந்திரன், இராசேந்திரம் (நகரசபை, சாவகச்சேரி) குணமணி (கண்டி) சசிகலா (மீனா) புகழேந்திரன் ஆகியோரது அன்புத் தாயாரும் நித்தியானந்தம் (மின்சாரசபை, யாழ்.) அழகேஸ்வரன், ராதாகிருஷ்ணன் (கண்டி) இராசேஸ்வரி, நிர்மலா, காந்திமதி, புஸ்பராணி ஆகியோரது அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (7-5-98) இன்று நிறைவேற்றப்பட்டு 12.00 மணியளவில் வேம்பிராய் மயானத்தில் பூதவுடல் தகனஞ் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்

நுணாவில் மேற்கு,
மடத்தடி,
சாவகச்சேரி.

(55803)

---

## ஈஸ்வரம்மா தின விழா

பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா சமித்தியில் அன்னை ஈஸ்வரம்மா தின விழாவும் (சிறுவர் தினம்) விசாகப் பண்டிகை விழாவும் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 5 மணி வரை நடைபெறும். (உ-3)

## மெய்வன்மை போட்டிகள்

யாழ். வலயம் இரண்டின் வலயமட்ட மெய்வன்மைப் போட்டிகள் நாளை முதல் மூன்று தினங்கள் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் யாழ். வலயம் இரண்டின் கல்விப்பணிப்பாளர் திரு. சி. சிவராசா தலைமையில் நடைபெற உள்ளன. கோட்ட மட்டங்களில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற போட்டியாளர்களைத் தவறாது பங்குபற்றுமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-118)

## வெட்டப்படும் கொப்புகள்

யாழ். — பலாலி வீதிப் பகுதியில் இரு மருங்கிலுமுள்ள மரக் கொப்புகள், கிளைகள் போன்றவை வெட்டப்பட்டு வருகின்றன. கடந்த திங்கட்கிழமை முற்பகலில் கோண்டாவில் பகுதியில் இடம் பெற்ற கிளைமோர் கண்ணி வெடிச் சம்பவத்தை அடுத்தே இந்நடவடிக்கை எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ-139)

## செத்தல் மிளகாய் கொள்வனவு

நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் விவசாயிகளிடமிருந்து செத்தல் மிளகாயை கொள்வனவு செய்து வருகிறது. கொள்வனவு விலையாக கிலோவுக்கு 70 ரூபா வழங்கப்படும். விற்பனை செய்ய விரும்புபவர்கள் நீர்வேலியில் அமைந்துள்ள மொத்த நிலையக் களஞ்சியப் பொறுப்பாளருடன் தொடர்பு கொள்ளும்படி கோரப்பட்டுள்ளனர்.

மிளகாய் நீண்டதாகவும் காய்ந்த சிவப்பு நிறமுடையதாகவும் இருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ-154)


**லிபேட்டி தியேட்டர்**

அச்சுவேலி.

இன்றும் நாளையும்
T. ராஜேந்தர், ராஜீவ், சங்கர், ஜோதி நடித்த
**ரயில் பயணங்களில்**

சனி, ஞாயிறு முதல்
எம். ஜி. ஆர். நடித்த
**ஊருக்கு உழைப்பவன்**

நேரம்:- 10-30, 2-30
(பழைய நேரம்)
தொலைபேசி இல.
070 - 212223

(55326)



**நாகம்ஸ் சினிமா**

சுன்னாகம்

07 - 05 - 98 வியாழன்
அகல வெண் திரையில்
ரஜனி-மீனா நடித்த
**எஜமான்**
(CD வெளியீடு)
காட்சி 10-30 — 2-30

(55807)



**BOSCO Institute**

25, றக்கா றோட்,
யாழ்ப்பாணம்.

Spoken English
by:
BRITTO

புதிய பிரிவு ஆரம்பம்:
09-05-98
[illegible]

(55813)


---

# மரண அறிவித்தல்கள்

## சிதம்பரப்பிள்ளை செல்லத்துரை

(இளைப்பாறிய அதிபர்)

புத்தூர் சோமாஸ்கந்தா பாடசாலையின் ஒய்வு பெற்ற ஆசிரியரும், திருநெல்வேலி இந்து தமிழ் கலவன் பாடசாலையின் ஒய்வுபெற்ற அதிபருமாகிய சிதம்பரப்பிள்ளை செல்லத்துரை நேற்று (06-05-98) காலமாகிவிட்டார்.

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், பலாலி வீதி திருநெல்வேலி வடக்கை வதிவிடமாகவும் கொண்ட இவர் நீர்வேலி வடக்கு சிதம்பரப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், சத்தியபாலதேவியின் அன்புக் கணவரும், அன்னலட்சுமி, சத்திய காந்தன் (பொறியியலாளர், லண்டன்), சிவதொண்டன் (கணக்காளர், லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுப்பிரமணியம் (அதிபர், கூட்டுறவு அபிவிருத்தி நிலையம், யாழ்ப்பாணம்), மாலா (கணக்காளர், லண்டன்), மாஜி (வங்கி முகாமையாளர், லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜெயக்குமார் (லண்டன்). சிவராணி (லண்டன்), சிவரஞ்சனி (கோண்டாவில் C. C. பாடசாலை), தர்சன் (லண்டன்), நிதர்சன் (லண்டன்), பாமளா (லண்டன்), கிருஸ்ணா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும், ஜெனனன் (லண்டன்), ஜெனீசன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பூட்டனாரும், காலஞ்சென்ற புவனேஸ்வரி, பத்மநாதன் (ஒய்வுபெற்ற, இலங்கை வங்கி உத்தியோகத்தர்) சரஸ்வதி (இளைப்பாறிய ஆசிரியை, ஈவினை), கணேசன் (கணக்காளர், லண்டன்) ஆகியோரின் அன்பு அத்தானும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07-05-98) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. சுப்பிரமணியம்
(மருமகன்)
(அதிபர், கூட்டுறவு அபிவிருத்தி நிலையம், யாழ்ப்பாணம்.)

வைரவர் கோயில் முன்பாக,
பலாலி வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.

(55810)

---

## சுப்பர் கிருஷ்ணபிள்ளை

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், பாண்டியன் குளத்தை இல. 215, (வவுனிக்குளம்) வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பர் கிருஷ்ணபிள்ளை ஆசாரியார் 03-05-98 இல் பாண்டியன்குளத்தில் காலமானார்.

அன்னார் தேவராணியின் (வள்ளியம்மா) அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான சுப்பர் நாகமுத்து தம்பதிகளின் ஏகபுத்திரனும், காலஞ் சென்றவர்களான செல்லம்மா, தங்கமுத்து, இராசம்மா, கனகமணி ஆகியோரின் சகோதரனும், காலஞ் சென்றவர்களான மாணிக்கம் தெய்வானைப்பிள்ளையின் மருமகனும், அகிலாண்டநாயகி (அகில்), தவராசா (தவம்), மனோராசா (மனோ), சண்முகராசா (கண்ணன், ஜேர்மனி), தேவநாயகி (கலா), மதன்ராஜ் (மதன்) ஆகியோரின் தந்தையாரும், தேவகி, சரோஜாதேவி, விக்னேஸ்வரி, றமணதாசன் ஆகியோரின் மாமனாரும், துஷாந்த், கஜன், பிரகாஷ், அனுராஜ், சாருதாஸ், காலஞ்சென்ற நிதர்சனா மற்றும் கம்சத்வனி, மதுரன், பிரசாந்த், இந்துஜன், தர்சன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 04-05-1998 இல் பாண்டியன்குளத்தில் நடைபெற்றன. இத்தகவலை அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
கி. தவராசா
(மகன்)

பிள்ளையார்கோயிலடி,
அச்சுவேலி.

(55806)

---

திருமதி

## செல்லத்துரை நாகம்மா

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை நாகம்மா 06-05-98 அன்று காலை 6.00 மணிக்கு காலமானார்.

இவர் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும், கந்தையா பொன்னுப்பிள்ளையின் அன்பு மகளும், காலஞ் சென்ற மார்க்கண்டு மற்றும் சுப்பிரமணியம், நடராஜா, சின்னத்தம்பி ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்வராஜா (பிரான்ஸ்) சசிரேகா, வசிரேகா ஆகியோரின் பாசமிகு தாயாரும் திலகவதி, அருணாசலம், நடனகுமார் (குமார் மதுபானச்சாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும் மோகனன், மோகலி, மோகனா, சுதர்சனா, நிதர்சனா, கவிசனா, கௌசிகன், விதுசனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 07-05-98 இன்று வியாழக்கிழமை திருநெல்வேலியில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 10.00 மணிக்கு கோண்டாவில் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நடனகுமார்
(மருமகன்)
(குமார் மதுபானச்சாலை)

156, பாற்பண்ணை வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(55798)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பேச்சுப் பல்லக்கு!

யாழ்ப்பாணக் குடா நாட்டுக்கு இப்போது அடிக்கடி வெளிநாட்டுப் பிரதிநிதிகள் வந்து செல்கிறார்கள். அவ்வாறு வருவோரில் அனேகமாக எல்லோருமே குடாநாட்டு மக்களின் தேவையை நிறைவேற்றக் கூடிய ஏதோ ஒரு திட்டத்துக்கு உதவுவதற்கு இணக்கம் தெரிவித்துச் செல்கிறார்கள்.

பொதுவாக நோக்கும்போது, இப்பகுதி மக்களின் புனர்வாழ்வு, மற்றும் அன்றாடத் தேவைகளை நிறைவேற்ற உதவிகள் கிடைக்கும் என்ற நம்பிக்கை உண்டாக்கப்படுகிறது. அரசாங்கத் திணைக்களங்கள் ஊடாகவும் பல பணிகள் நிறைவேற்றப்படும் என்றும் காண்பிக்கப்படுகிறது.

ஆனால் உண்மையான நிலை, பேச்சுப் பல்லக்கு, தம்பி கால் நடை என்றவாறே உள்ளது! சொல்லப்படுவதில் அல்லது காண்பிக்கப்படுவதில் பத்தில் ஒன்று தானும் செயல் வடிவம் காண்பது குறைவு என்பதே யதார்த்தம்.

மக்களின் அடிப்படை, அன்றாடத் தேவைகளில் சிறிய அளவினதே மெதுமெதுவாக பூர்த்திசெய்யப்பட்டு வருகிறது. ஆனால் இங்கு இயல்பு நிலைமை திரும்பிக் கொண்டிருப்பதாக ஒரு மாயையும் உருவாக்கப்படுகிறது.

உள்ளூராட்சி சபைகளுக்கு அவசர அவசரமாகத் தேர்தல் நடத்தப்பட்ட போது, அவை இயங்குவதற்குத் தேவையான மற்றும் மக்கள் சேவைகளைச் செய்வதற்கான நிதி விரைவில் ஒதுக்கப்பட்டுவிடும் என்றே மக்கள் நம்ப வைக்கப்பட்டனர்.

ஆனால் தேர்தல் நடைபெற்று நான்கு மாதங்களாகியும் நிதி கைக்கு வந்து சேரவில்லை.

ஆகப் பிந்திக் கிடைத்த தகவல் ஒன்றின் பிரகாரம் திணைக்களங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் பத்துச் சத வீதத்தைச் செலவிடாமல் இருப்பில் வைத்திருக்குமாறு வடக்கு — கிழக்கு மாகாண சபை கேட்டிருக்கிறது.

இந்த மிச்சம் பிடித்தல் அல்லது சேமிப்பு அவசர தேவைக்குப் பயன்படுத்துவதற்காக என்றிருந்தால் பரவாயில்லை. அது பாதுகாப்புச் செலவுக்கு அவசரமாக மீளப் பெறப்படுவதற்காக இருக்குமோ என்ற சந்தேகம் தோன்றியுள்ளது.

அரசாங்கம் படையைப் பெருக்கி, போரைத் தொடர்வதில் அதிக நாட்டம் காட்டுகையில், யாழ்ப்பாண மக்களின் புனர்வாழ்வு, அன்றாடத் தேவைகளை நிறைவேற்றுவதற்கென்று பணம் வானத்திலிருந்தா சொரியப்படும்?

புத்தாண்டு விழாக்கள், போட்டிகள், இசை நிகழ்ச்சிகள், விளையாட்டுகள் ஆகியன ஏற்பாடு செய்யப்படுவதால் குடாநாட்டில் இயல்பு நிலை திரும்பி விட்டது அல்லது திரும்புகிறதுஎன்று அர்த்தமாகாது.

மக்களின் தேவைகளும் அவர்களுக்குரிய சேவைகளும் முழு அளவில் செயற்படும் போதே, அதற்கான சூழ்நிலை உருவாகும் போதே இயல்பு நிலையை முற்றாக எதிர்பார்க்கலாம். அது வரைக்கும் ஆமைவேகத்திலேயே யாவும் நகர்ந்து செல்லும் என்று கணிக்கலாம்.

# நிதி ஒதுக்கீட்டில் பத்து வீதத்தை மீதப்படுத்துமாறு சுற்றறிக்கை

## திணைக்களத் தலைவர்கள் விசனம்

யாழ்ப்பாணம், மே 7

யாழ். மாவட்ட அரச திணைக்களங்கள் சில இந்த வருடத்திற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் 10 வீதத்தினை செலவு செய்யாது மீதப்படுத்த வேண்டுமெனக் கோரும் சுற்றறிக்கைகள் கடந்த வார இறுதியில்சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே குறைந்த தொகை நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதால் புதிய திட்டங்கள் பலவற்றை அமுல் படுத்த முடியாது இருக்கும் மேற்படி திணைக்களங்களுக்கு இந்தப் புதிய சுற்றறிக்கை மேலும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளதாக திணைக்களத் தலைவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

யாழ் மாவட்டத் திணைக்களங்களுக்கு ஒதுக்கப்படும் நிதிஒதுக்கீடுகள் உரிய காலத்தில் வந்து சேருவதில்லை. இந்நிலையில் 10 வீதத்தை மிச்சப்படுத்தும் புதிய அறிவுறுத்தல் மேலும் தம்மை நெருக்கடிக்குள் தள்ளியிருப்பதாக திணைக்களத் தலைவர்கள் தெரிவித்தனர். (ஐ)

## குருபூசை

கொழும்புத்துறை, மே7.

யாழ். குடாநாட்டில் உள்ள அனேக இந்து இளைஞர் மன்றங்களில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 63 நாயன்மார்களில் ஒருவரான உமாபதிசிவாச்சாரியார் குருபூசை கொண்டாடப்படவுள்ளது. (ஐ - 30)

## சம்மேளனங்கள் பதிவு

கிராம அலுவலர் பிரிவுகள் தோறும் அமைக்கப்பட்டு இயங்கி வரும் விவசாய சம்மேளனங்கள் விவசாய திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

உரும்பிராய் விவசாய போதனாசிரியர்பிரிவில் 14சம்மேளனங்களும், புத்தூர் பிரிவில் 16 சம்மேளனங்களும் இவற்றில் அடங்கும். இச்சம்மேளனங்கள் சொந்தமாக வங்கிகளில் பற்றுவரவுக் கணக்குகளையும் ஆரம்பித்துள்ளன. (ஐ–154)

## பயிர்ச் செய்கை அலுவலருக்கு சேவை நீடிப்பு இல்லை

சண்டிலிப்பாய், மே 7

கடந்த 1978 ஆம் ஆண்டில் பயிர்ச் செய்கை உத்தியோகத்தர்களாக நியமனம் பெற்று பின்னர் கிராம அலுவலர்களாக உள்ளீர்க்கப்பட்டு 10 வருட காலத்திற்கு மேலாக கடமையாற்றி வரும் கிராம அலுவலர்களுக்கு 55 வயதிற்கு மேல் சேவை நீடிப்பு வழங்குவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இவர்கள் தமது 55 ஆவது வயதில் சேவை நீடிப்புக்கு முறைப்படி விண்ணப்பித்த போது 30–96 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையைக் காரணம் காட்டி சேவை நீடிப்பு வழங்குவதற்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

இவர்களுக்கும் ஏனைய அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படுவதுபோல் 60 வயது வரையான சேவை நீடிப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஈ. பி. டி. பி. கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா பொது நிர்வாக பெருந்தோட்டத்துறை அமைச்சர் இரத்தினசிறி விக்கிரமநாயககாவைக் கேட்டுள்ளார். (ஐ–135)

## உலர் உணவு விநியோகம்

உரும்பிராய், மே 7

நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் மீளக்குடியமர்ந்தவர்களின் 62 'ஏ' ''பி' ஆகிய புள்ளிஙுகக்குரிய உலர்உணவு விநியோகம் தற்போது நடைபெறுகிறது.

அரிசி, சீனி, மைசூர்ப் பருப்பு, நெஸ்பிறே பால்மா ஆகியன வழங்கப்படுகின்றன. (ஐ–154)

## சில பிரதேச செயலகங்களில் இம்மாதஒய்வூதியத்துடன் ஒய்வூதிய நிலுவை

யாழ்ப்பாணம், மே 7

யாழ். மாவட்ட ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதிய நிலுவைப்பணம் வழங்கும் திட்டத்தின் கீழ் 01 - 01 - 88 தொடக்கம் 30-06-89 வரையிலான மாதங்களுக்கான ஒய்வூதிய நிலுவை சில பிரதேச செயலகங்களில் இம்மாத ஒய்வூதியத்துடன்வழங்கப்படவுள்ளன.

நிதி ஒதுக்கீடு குறைவாக இருப்பதனாலும், பிரதேச செயலகங்களில் காணப்படும் ஊழியர் பற்றாக்குறையினாலும் சில பிரதேச செயலர் பிரிவுகளில் இம்மாத ஓய்வூதியத்துடன் நிலுவைக் கொடுப்பனவை வழங்க முடியாதிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ–7)

## பிரதேச செயலர் பிரிவு ரீதியாக மண்வெட்டி விநியோகம்

யாழ்ப்பாணம் மே 7

யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு வழங்கவென உலக உணவு விவசாய நிறுவனத்தினால் வழங்கப்பட்ட மண்வெட்டிகளை விநியோகிக்கும் பணி நேற்று முன்தினம் முதல் ஆரம்பமாகின.

யாழ். மாவட்ட விவசாய விரிவாக்க அலுவலகம் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக விவசாய சம்மேளனங்களின் உதவியுடன் மண்வெட்டிகளை விநியோகம் செய்யும் பணியை ஆரம்பித்துள்ளது.

பிரதேச செயலர் பிரிவுகளும், அவற்றுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மண்வெட்டிகளின் தொகையும்வருமாறு;

★ கோப்பாய்:- 1,500
★ நல்லூர்;- 750
★ வடமராட்சி;- 600
★ சாவகச்சேரி;- 550
★ பளை;- 500
★ ஊர்காவற்றுறை:- 200
★ வேலணை:- 150
★ நெடுந்தீவு:- 50
★ சங்கானை:- 500
★ உடுவில்:- 750
★ சண்டிலிப்பாய்: 750
★ தெல்லிப்பளை:- 396

முழுநேரம் விவசாயத்தில் ஈடுபடும் விவசாயிகளுக்கும், கடந்த கால வன்செயல்களின்போது பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கும் முன்னுரிமை அடிப்படையில் மண்வெட்டிகள் வழங்கப்படவுள்ளதாக மாவட்ட விவசாய விரிவாக்க அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. [இ-7]

## வவுனியா விபத்துச்சம்பவம் அழிந்த ஆயுதங்களின் பெறுமதி ரூ. ஒரு கோடி

மட்டக்களப்பு, மே 7

வவுனியா இராணுவ தலைமையக ஆயுதக்கிடங்கில் ஏற்பட்ட வெடிவிபத்துச் சம்பவம் காரணமாக இழக்கப்பட்ட ஆயுதங்களின் மொத்தப் பெறுமதி ஒரு கோடி ரூபாவுக்கு மேல் இருக்கும் என பூர்வாங்கமாக மதிப்பிடப்பட்டுள்ளது.

ஆர். பி. ஜி. மோட்டார்கள், கிரனேட், ரி56 ரவைகள் உட்பட பல்வேறு ரக ஆயுதங்கள் இங்கு வைக்கப்பட்டிருந்தன.

ஆயுதங்களை ஒழுங்காக அடுக்கிக்கொண்டிருக்கையில் வெப்பம் காரணமாக கிரனேட் ஒன்று வெடித்ததன் காரணமாகவே விபத்து ஏற்பட்டுள்ளது.

இவ் விபத்தில் கொல்லப்பட்ட ராணுவ வீரர் ஒருவரின் சடலம் கருகிய நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

''இச் சம்பவம் சதி வேலையும் அல்ல; தாக்குதலும் அல்ல விபத்தே ஆகும். விசாரணைகள் நடைபெறுகின்றன'' என்று இராணுவத் தளபதி றோகான்தலுவத்த தெரிவித்தார். (ஐ–21)

## மட்டுவில் பகுதியில் பன்றிகள் அட்டகாசம்

சாவகச்சேரி, மே 7

சரசாலை வடக்குப் பகுதியிலுள்ள காட்டுப்பக்கத்திலிருந்து வெளியேறிய சிறு பன்றிக் கூட்டமொன்று மக்கள் குடியிருப்புப் பகுதிக்குள் நுழைந்து அட்டகாசம் புரிந்தது. இப் பன்றிக்கூட்டம் சரசாலைப் பகுதிகளினூடாக மட்டுவில் வடக்குப் பகுதிக்குள் நுழைந்தது. இப் பன்றிக்கூட்டத்தைக் கண்ட நாய்கள் பன்றிகளை கடித்துத் துரத்த முற்பட்ட வேளை அவை நாய்களை இடித்துக்கொண்டு கண்டபடி வீட்டு வளவுகளினூடாக சிதறி ஓட ஆரம்பித்தன. அப்பொழுது எதிர்ப்பட்ட சிலரையும் பன்றிகள் தாக்கின.

மட்டுவில் வயல் வெளியில் தோட்டத்திற்கு நீர் இறைத்துக் கொண்டு நின்ற சிலரும் பன்றிகளால் தாக்கப்பட்டனர். அத்துடன் அவர்கள் வைத்திருந்த நீர் இறைக்கப் பாவிக்கும் பட்டையையும் பன்றிகள் இடித்துப்பிய்த்துக் கொண்டு ஓட்டம் பிடித்தன. இப்பன்றிக் கூட்டத்தை பின் தொடர்ந்த இளைஞர்கள் இறுதியில் மூன்றுபன்றிகளை அடித்துக் கொன்றனர். ஏனையவை மட்டுவில் தெற்குப் பின்புறமாகவுள்ள காட்டிற்குள் தப்பியோடி விட்டன. பன்றி தாக்கியதில் மட்டுவில் வடக்குப் பகுதி ... காயங்களுக்குள்ளானார்கள். (ஐ-31)

### நாளை

சித்திரை - 25
வெள்ளிக்கிழமை
திதி: துவாதசி
பிற்பகல் 2.37 வரை.
நட்சத்திரம்: அத்தம்
பின்னிரவு 1.42 வரை
சுபநேரம்: 5.55 –7.25
ராகுகாலம்: 10.25– 11.55
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## தென்பகுதிக்கு வெங்காயம் அனுப்ப ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே 7

யாழ். மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் வெங்காயத்தை நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு எடுத்துச் செல்வதற்கு ஏற்ற ஒழுங்குகளை யாழ். மாவட்ட கூட்டுறவு சங்கங்களின் சமாசம் எடுத்துள்ளது.

நேற்று முன்தினம் யாழ். செயலகத்தில் நடைபெற்ற விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகளுக்கும், மாகாண விவசாய அமைச்சின் செயலாளருக்கும் இடையிலான சந்திப்பில் இது தொடர்பான முடிவு எடுக்கப்பட்டது.

சிறிய வெங்காயம் 16 ரூபாவுக்கும், வேதாள வெங்காயம் 22 ரூபாவுக்கும் கொள்வனவு செய்யப்படுமெனவும், வெங்காயத்தை ஏற்றுமதிக்காக வைத்திருக்கும் விவசாயிகள் தத்தமது விவசாய கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் தொடர்பு கொண்டு இதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த வாரம் பருத்தித்துறையில் இருந்து புறப்படவுள்ள கப்பல் மூலம் வெங்காயத்தை அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7-5)

## பார்சல் குண்டு வெடித்து 2 படையினர் பலி

வெற்றிலைக்கேணியில் சோரன்பற்று என்னும் இடத்தில் கடந்த திங்களன்று பிற்பகல் 5 மணியளவில் ரோந்து சென்ற படையினர் அப்பகுதியில் இருந்த ஜொனி வெடியுடன் கூடிய மோட்டர் ஷெல் பார்சல் ஒன்றை எடுத்த போது அது வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இதில் இரு படையினர் உயிரிழந்தனர் என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (இ–3)

### உதயவாக்கு

வருவாய்க்குத் தக்க வாழ்க்கை இல்லாதபொழுது செல்வராவார் ஒருவருமிலர்; அது உள்ள பொழுது வறியவராவார் மிக அரியர்.

நாவலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரி. யோவான் கல்லூ[ரி]

# 175 ஆவது ஆண்டு

## கல்லூரி வரலாற்றுச் சுவடு

கல்வியிலும், விளையாட்டு துறையிலும் வட புலத்தில் நிகரற்று விளங்கும் முன்னணிப் பாடசாலைகளுள் ஒன்றான யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரிஆரம்பிக்கப்பட்ட 175 ஆவது ஆண்டு நிறைவு விழாவினை இவ்வாண்டு சிறப்புடன் கொண்டாடுகின்றது 1818 ஆம் ஆண்டு கிறிஸ்தவ மத பிரசார நோக்குடன் இங்கிலாந்திலிருந்து இலங்கைக்கு வருகைதந்த மூன்று குருமார்களுள் ஒருவரான வண. யோசப் நைற் அவர்கள் 1823 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் பண்டைய இராசதானியாகத் திகழ்ந்த நல்லூருக்கு வந்தார். நல்லூர் ஆங்கில செமினரி எனப் பெயரிட்டு 7 மாணவர்களுடன் 1823 ஆம் ஆண்டு மார்ச் மாதம் பாடசாலை ஒன்றை நிறுவினார். இப் பாடசாலையில் விவிலிய நூல் கற்பித்தலே முக்கிய பாடமாக அமைந்திருந்தது.

1841 ஆம் ஆண்டு பெண் பிள்ளைகளுக்கான பாடசாலை ஒன்றை நிறுவும் அவசியம் உணரப்பட்டது. எனவே நல்லூரில் இயங்கிய ஆங்கிலப் பாடசாலை சுண்டுக்குளியிலுள்ள இன்று சென். ஜோன்ஸ் கல்லூரி அமைந்துள்ள இடத்திற்கு மாற்றப்பட்டது. குத்தகைக்குப் பெறப்பட்ட இக் காணியில் நிரந்தரக் கட்டடங்கள் இன்றி வகுப்புக்கள் நடத்தப்பட்டன. இன்று பாரிய விருட்சமாக காணப்படும் புளியமரத்தின் கீழும் வகுப்புக்கள் நடத்தப்பட்டன. இடமாற்றத்தின் பின் பாடசாலையின் பெயரும் சுண்டுக்குளி செமினரி என மாற்றப்பட்டது. இக் கால கட்டத்தில்அதிபராகப் பணியாற்றியவர் வண. ஜே. ரி. ஜோன்ஸ்ரன் ஆவார். அவரின் கீழ் பாடசாலையின் முதல் மாணவர்களுள் ஒருவரும், முதல் தமிழ் மதபோதகருமான வண. ஜோன் ஹென்ஸ்மன் அவர்கள் தலைமையாசிரியராகப் பணியாற்றினார்.

1846இல் அதிபராகப் பதவியேற்ற வண. றொபேட் பார்ஜிட்ரர் அவர்களே சுண்டுக்குளிசெமினரியின் வளர்ச்சிக்குப் பாரிய பங்களிப்புச் செய்தவராவார். இவரது இருபதாண்டுப் பணியில் செமினெரிக்கு என்று நிரந்தரமான கட்டடத்தை 1861 ஆம் ஆண்டு நிறுவினார். இரண்டு ஆண்டுகளின் பின் முதன்முதலாக சென்னைப் பல்கலைக்கழக மற்றிக்குலேஷன் பரீட்சைக்கு மாணவர்களைத் தோற்றுவித்தார்.

### பெயர் சூட்டல்

வண. பார்ஜிட்டரின் பின் 1889 முதல் 1892 வரை பதில் அதிபராகக் கடமையாற்றி செமினரியின் பழைய மாணவரான திரு. சாஸ்ஸ் ஹன்டி அவர்களின் வேண்டுகோளுக்கு அமைய கல்கத்தா பல்கலைக்கழக பரீட்சைநிலையமாக 1890 இல் இப் பாடசாலை திகழ்ந்தது. 1891இல் செமினரி சுண்டுக்குளிக்கு இடமாற்றம் பெற்ற50ஆவது நிறைவு விழா கொண்டாடப்பட்டது. இவ்வாண்டு தான் சென்.ஜோன்ஸ்கல்லூரிஎன்ற பெயரும் சூட்டப்பட்டது. அவ்வாண்டில் பரிசளிப்பு விழா நடைபெற்றது என்றும் யாழ். அரச அதிபர் பிரதம விருந்தினராகப் பங்கேற்றார் என்றும் பதிவேடு கூறுகிறது. 1893 இல் மெய்வல்லுநர் போட்டியும் கிரிக்கெட் ஆட்டமும் நடைபெற்றதாக அறியக் கிடக்கிறது.

1895 முதல் 1899 வரை அதிபராக வண. ஜே. காட்டர் அவர்கள் பணியாற்றினார். 1896 இல் அதிபரின் பாரியார் திருமதி காட்டர் அம்மையார் அவர்கள்8பெண் பிள்ளைகளை அழைத்து அதிபர் இல்லத்தில் வகுப்புக்கள் நடத்தினார். இதுவே இன்றைய சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின் ஆரம்பம்ஆகும்.

கடந்த நூற்றாண்டின் 76 ஆண்டுகளில் 13 அதிபர்கள் பணியாற்றியுள்ளனர். 20 ஆம் நூற்றாண்டில் நீண்ட சேவையாற்றிய முக்கியம் வாய்ந்த 3 அதிபர்களைக் கூறலாம். 1900 ஆம் ஆண்டு முதல் அதிபர் பதவி வகித்த வண. ஜேக்கப் தொம்சன் காலம் கல்லூரியின் வரலாற்றில் முக்கிய கால கட்டமாகும்.

அவரது பணிகள் சில;

1904 — பழைய மாணவர் சங்கத்தினை அமைத்தல், சஞ்சிகை அறிமுகம் செய்தல்.

1905 — ஹொக்கி விளையாட்டை அறிமுகப் படுத்தல்.

1908 — கல்லூரிச் சின்னத்தை அறிமுகப் படுத்தல்.

1909 — மாணவர் தலைவர் அறிமுகம்.

1911 — அதிபர் வாசஸ்தலம் கட்டி முடித்தல்.

1913 — ஹன்டி ஞாபகார்த்த நூலகம் திறந்து வைத்தல்.

1914 — றொபேட் வில்லியம் ஞாபகார்த்த மண்டபம் கட்டி முடித்தல்.

1916 — யாழ்ப்பாணத்தில் முதன்முதலாகச் சாரணிய இயக்கத்தை கல்லூரியில் ஆரம்பித்தல்.

இவை அனைத்தும் இன்று வரை நிலைத்து கல்லூரியில் நிற்கின்றன.

### கல்லூரிக் கீதம்

1920 ஆம் ஆண்டு வண. கென்ரி பீற்றோ அதிபராக நியமிக்கப்பட்டார். 20 ஆண்டுகள் பணியாற்றிய இவரது காலத்தில் 1923 ஆம் ஆண்டு கல்லூரி நூற்றாண்டு விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டு பரிசளிப்பு விழாவில் கல்லூரிக் கீதம் முதலில் இசைக்கப்பட்டது.

1928இல் மகாத்மா காந்தி அடிகள் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கு வருகை தந்தது எல்லோராலும் பெரும் பேறாகக் கருதப்பட்டது. அரும் பணியாற்றிக் கொண்டிருந்த வண. பீற்றோ அவர்கள் தொண்டமானாறு கடலில் நீந்தும் போது விபத்தில் காலமானார்.

1940ஆம் ஆண்டு வண. பீற்றோவின் மரணத்தோடு கல்லூரியின் வரலாற்றில் ஒரு திருப்புமுனை ஆரம்பமாயிற்று. கடந்த 117ஆண்டுகளாக கல்லூரியின் அதிபர்களாகப் பணியாற்றியவர்கள் ஆங்கிலேய மதகுருமாரே. அதிபரின் மரணத்தின் பின் முதல் தமிழ் அதிபராக கல்லூரியின் பழைய மாணவரான வண. ஜே. ரி. அருளானந்தம் அவர்கள் அதிபராக நியமிக்கப்பட்டார். 17 ஆண்டுகளாகப்பணிபுரிந்த அதிபரது காலத்தில் கல்லூரியின் கட்டடங்கள் பல்கிப் பெருகின. வீதி கடந்து கல்லூரிக்கு முன்னால் இயங்கிய திரைப்பட அரங்கை வாங்கி அதனை மாணவர் விடுதியாகவும், ஆசிரியர் விடுதியாகவும் மாற்றி அமைத்தார். கல்லூரியின் அயலிலுள்ள தனியார் கட்டடங்களை கல்லூரியின் சொத்தாக்குவதே தனது பொழுது போக்கு என்று அடிக்கடி கூறுவாராம். வண. அருளானந்தம் ஓய்வு பெற்றதும் திரு. பி. ரி. மத்தாய் அவர்கள் அதிபராக நியமிக்கப்பட்டார்.

*செ. கணபதிப்பிள்ளை*
(முன்னாள் உபஅதிபர்,
உபதலைவர், ப.மா.ச.யா)

### சோதனையான காலம்

1960ஆம் ஆண்டு முதல் பின்வந்த ஆண்டுகள் கல்லூரிக்கு சோதனை மிகுந்த காலப்பகுதியாகும். இலங்கை அரசு பாடசாலைகளைப் பொறுப்பேற்றது. அப்பொழுது கல்விக்கும் தமிழ்ச் சமூகத்திற்கும் கல்லூரியின் பங்களிப்பு பாதிக்கப்படும் எனக்கருதிய பல பழைய மாணவர்கள், எமது கல்லூரியை கட்டணம் அறிவிடாத தனியார்பாடசாலையாக நடத்தப் தீர்மானித்தனர். அப்பொழுது அதிபராகக் கடமையாற்றிய திரு. ஏ. டபிள்யூ. ராஜசேகரம், ஆசிரியர், பழைய மாணவர், பெற்றோர், நலன் விரும்பிகள் எனப்பலர் நிதி சேகரித்து பாடசாலையை இயங்க வைத்தனர். இருப்பினும் நிதிப்பற்றாக் குறையை நிவர்த்தி செய்ய கல்லூரிக்குரிய சில கட்டடங்கள், ஓங்கி உயர்ந்து அழகூட்டிய மலை வேம்புகள் விற்பனையாகின. கல்லூரியை நடத்தும் பாரிய சுமையின் தாக்கத்தால் அதிபர் அவர்கள் நோய்வாய்ப்பட்டு ஓய்வு பெற்றார். இவரது சேவைக்காலம் சோதனைக்குரியதாயினும் கல்லூரிப் பரீட்சைப் பெறுபேறுகள், விளையாட்டுத்துறை என்பன தேசிய மட்டத்தில் சாதனைகள் கண்டு ஓங்கி விளங்கின. 1964இல் இலங்கையில் முதன்முதலாக எமது கல்லூரியிலேயே ''இன்ரறக்ட்'' கழகம் அமைக்கப் பட்டது.

1967 இல் திரு. க. பூரணம் பிள்ளை அதிபராகவும், ஜெ. சி. ஹன்டி முகாமையாளராகவும் பணியாற்றி கல்லூரியின் நிதி வளங்களைப் பெருக்கினர். 1973 ஆம் ஆண்டு கல்லூரியின் 150-வது ஆண்டு நிறைவாகும். அதன் ஞாபகார்த்தமாகவே யாழ்ப்பாணத்தில் மிகப் பெரிய மண்டபமாக பீற்றோ ஞாபகார்த்த மண்டபம் திறந்து வைக்கப்பட்டது. பூரணம் பிள்ளை அவர்களைத் தொடர்ந்து, கல்லூரியின் பழைய மாணவரான திரு. சி.ஈ. ஆனந்தராஜன் அதிபராகப் பதவியேற்றார். இவரின் காலத்தில் கல்லூரியில் பல கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டன. கல்வியிலும், விளையாட்டிலும், மாணவர் ஒழுக்கத்திலும் மிக உயர்ந்த நிலையில் கல்லூரி தலை நிமிர்ந்து நின்றது.

### புதுப்பொலிவு பெற்றது

1987 இல் இந்திய அமைதி காக்கும் படையினரால் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக கல்லூரியின் பல கட்டடங்கள் பாரிய சேதத்திற்கு உள்ளாகின. இவை தொடர்ந்து அதிபராகப்பணி பார்த்த கலாநிதி இ. எஸ். தேவசகாயம் அவர்களின் முயற்சியினால் வெளிநாடுகளின் உதவியுடன் புதுப் பொலிவு பெற்றன. அவற்றை பூரணப்படுத்தும் பொறுப்பு 1990 இல் பதில் அதிபராக நியமிக்கப்பட்டு 1993 இல் அதிபராகப் பணியைத் தொடர்ந்த திரு.எஸ். தனபாலன் அவர்களின் கடனாயிற்று. 1995இல் இடம்பெற்ற இலங்கை இராணுவ நடவடிக்கையினால் மீண்டும் பல கட்டடங்கள் பலத்த சேதங்களுக்கு உள்ளாகின. அதிபரின் உறுதி குலையாத பெரும் முயற்சியின் பயனாக இன்று அக்கட்டடங்கள் புனரமைக்கப்பட்டுப் பொலிவுடன் விளங்குகின்றன. இப் பெரு முயற்சிக்கு நிதியுதவி செய்த உள்நாட்டு வெளிநாட்டு அமைப்புகளுக்கு கல்லூரி கடப்பாடுயுடையதாகும்.

இவ்வாண்டு மே மாதம் 7, 8, 9 ஆம் திகதிகளில் 175 ஆவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும் சென். ஜோன்ஸ் கல்லூரி இன்று பலராலும் போற்றப் படும்ஒரு கல்லூரியாகத்திகழ்கிறது. ஆண்டாண்டு காலமாக பல புகழ் பூத்த கல்விமான்களை இக்கல்லூரி தோற்றுவித்துள்ளது. பழைய மாணவர்கள் சிறந்த அரசியல் வாதிகளாக, பேராசிரியர்களாக வைத்திய நிபுணர்களாக, பொறியியலாளர்களாக, சட்டவல்லுநர்களாக நிர்வாகிகளாக, கணக்காளர்களாக பல்வேறு துறைகளில் சிறப்புற்று விளங்கினர்; விளங்குகின்றனர்.

வெளிநாடு சென்றவர்கள் கல்லூரி மீது கொண்ட உயர்ந்த பற்றுதலால் இங்கிலாந்து, கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் பழைய மாணவர் சங்கங்கள் அமைத்து கல்லூரிக்கு வேண்டிய உதவிகளைப் புரிந்து வருகின்றார்கள்.

இலங்கையிலும், வடக்கிலும், தெற்கிலுமுள்ள பழைய மாணவர்கள் கல்லூரிக்கு உதவிகளைச் செவ்வனே ஆற்றுகின்றனர்.

இன்றைய 175 ஆவது ஆண்டு நிறைவு காலத்தில் அதிபராக அரும்பணியாற்றும் திரு. எஸ். தனபாலன் அவர்களுக்கும் ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள் எல்லோருக்கும் எதிர்காலம் எல்லாச்சிறப்புகளும் அமைய இறைவனை வேண்டுகின்றோம்.

★



## புதிய சாதனைகளால் புகழ் பரப்பட்டும்

எண்ணைக் கண்ணாக மதித்தவர் தமிழர். எழுத்தையும் அவ்வாறே போற்றினார்கள். அறிவுக்கு ஏதுவாக இருந்தது கல்வி. எனவே கல்வியைப் பேணும் விழுமியத்தில் ஊறி இருந்தது யாழ்ப்பாணம். கல்வி ஒளியைப் பரப்ப வந்த ஆங்கிலேயர் தகுந்த ஒத்தாசையை யாழ்ப்பாணத்தில் கண்டனர். கல்விக்கு வரவேற்பளித்த மக்கள் மத்தியில் நல்ல கல்லூரியை நிறுவ முனைந்தார்கள் அவர்கள். இந்தச் சூழ்நிலையில் எழுந்தது பரி. யோவான் கல்லூரி. இக் கல்லூரியின் மகத்தான சேவை மக்கள் மனதில் ஆழப் பதிந்துள்ளது.

எமது கல்லூரியின் 175 ஆவது ஆண்டு நிறைவினை நாம் கொண்டாடும்பொழுது, அதன் வளர்ச்சிக்கும், சிறப்புக்கும் காரணங்கள் எவை என்பதைச் சிந்திக்க வேண்டும். உன்னத இலட்சியங்களின்அடிப்படையில் உருவாகியது பரி. யோவான் கல்லூரி. 117 ஆண்டுகள் தொடர்ச்சியாக தலைமை வகித்த ஆங்கிலேய அதிபர்களின் அர்ப்பணிப்பில் வளர்ந்தது எமது கல்லூரி. பிறர் நலத்தை மேலாக மதித்து மாணவர் வளர்ச்சியில் பெருமை கண்ட ஆசிரியர்களின் சேவை கல்லூரியின் சிறப்புக்கு மேலும் மெருகூட்டிற்று. கல்விக்கு முன்னுரிமை வழங்கினர் பெற்றோர். மாணவரின் கடின உழைப்பு கல்லூரிககு நற்பெயர் நல்கிற்று.

ஆங்கில அறிவைப் புகட்டியது பரி. யோவான் கல்லூரி. அதனோடு டுசொடுத்து அமைந்தது தமிழ்க் கல்வி. ஆங்கில அறிவோடு மேற்குலகை அறிந்தது மாணவ சமுதாயம், ஆனால் தமிழர் பாரம்பரியத்தையும் உணர வைத்தது கல்லூரி. விஞ்ஞானக் கல்வி உயர்ந்து நின்றது. அத்தோடு தமிழறிவும் சேர்ந்திருந்தது. சமூகத்தோடு ஒத்துவளர்ந்து, ஆழப் பதிந்த உணர்வுகளை வளம்படுத்தியது பரி. யோவான் கல்லூரி. கல்வி சிறக்க, கல்லூரி வளர வேண்டும். கல்லூரி வளர உறுதியான தலைமை வேண்டும். இதனை அதிபர்கள் வழங்கினார்கள். ஆரியர்கள் ஆதரித்தார்கள். பெற்றோர்கள் போற்றினார்கள். மாணவரின் ஈடுபாடு நெருக்கமாக இருந்தது. மாறுபாடில்லாத இந்தப் பாரம்பரியத்தில் வளர்ந்த பரி யோவான் கல்லூரி மேலும் வளருகின்றது.

இடர்கள் பல வந்தபோதும் அவற்றுக்கு நேர்நின்று சஞ்சலத்துக்கு இடங்கொடாது கல்லூரியின் வளர்ச்சிக்குத் தலைமை தாங்கும் அதிபர் திரு. தனபாலனின் சேவையை பழைய மாணவர் சங்கம் மெச்சுகின்றது. ஆசிரியர்களின் முயற்சிகளையும், அர்ப்பணங்களையும் போற்றுகின்றது. அத்தோடு பெற்றோரின் ஆதரவும், மாணவரின் கல்விப்பற்றும் எம்மை மகிழ்விக்கின்றன. பழம் பெருமையால் உந்தப்படும் பரி.யோவான் கல்லூரி, புதிய சாதனையால் புகழ்பரப்பும் என்ற அசையாத நம்பிக்கை பழைய மாணவருக்கு உண்டு.

*சு. சிவதாசன் தலைவர்,*
பரி.யோவான் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (தென். இலங்கை)

ST

AN

[..]th M

08. 30 -

09. 45 -

10. 30 -

11. 00 -

12. 00 -

13. 00 -

16. 00 -

17. 00 -

8th M

08. 30 -

09. 30 -

11. 30 -

16. 15 -

9th M

10. 00 -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ாரி, யாழ்ப்பாணம்.

விழா சிறப்பு இதழ்




கல்லூரியின் நுழைவாயில்



அதிபர் எஸ். தனபாலன்

# ஆளுநர் சபைத் தலைவரின் நல்லாசி

175ஆவதுஆண்டு நிறைவு விழாவினைக் கொண்டாடும் யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கு திருச்சபை ஆளுநர் சபையின் சார்பில் நல்லாசிகளையும் வாழ்த்துகளையும் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி கொள்கின்றேன். இக் கல்லூரியின் பழைய மாணவனாகவும், குறுகிய காலத்திற்கு ஆசிரியராகவும், அதிபராகவும் இருந்தமையால் தனிப்பட்ட முறையில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இலங்கைக்கு வருகைதந்த ஆங்கிலத் திருச்சபையின் முதல் மதப்பிர சாரகர்களுள் ஒருவரான வண.நைற் அவர்களால் இப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பலமதப்பிரசாரக அதிபர்களின் அளப்பரிய சேவையினால் இலங்கையின் கல்வி நிறுவனங்களுள் முன்னணிக் கல்லூரியாக சென். ஜோன்ஸ் [illegible]கின்றது. கடந்த நூற்றாண்டு முடிவில் ஏனைய கிறிஸ்தவப் பாடசாலைகளுள் ஒன்றாக விளங்கிய இப்பாடசாலையை இந் நாட்டின் சிறந்த பாடசாலையாக மாற்றி அமைத்தோருக்கு நாம் நன்றி செலுத்துகின்றோம்.

தலா 20 ஆண்டுகள் அதிபராகப் பணியாற்றிய வண. யேக்கப் தொம்சன், வண. ஹென்றி பீற்றோ, 17ஆண்டுகள் கடமையாற்றிய முதல்தேசிய அதிபரான வண. J. T. அருளானந்தம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். கல்லூரியின் இன்றைய நிலைக்கு இம் மூவரின் சேவைகள் மூலைக் கல்லாயிற்று. இவர்கள் தவிர இன்னும் பல அதிபர்கள், ஆசிரியர்கள், பழையமாணவர்கள், நலன்விரும்பிகள் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆற்றிய சேவைகளும் கல்லூரியின் இன்றைய நிலைக்கு துணைநின்றன. அவர்களுக்கும் நாம் புகழ்மாலை சூட்டுகின்றோம்.

பல்வேறு துறைகளில் உச்சநிலை அடைந்த பலரை சென்.ஜோன்ஸ் தோற்றுவித்துள்ளது. அவர்கள் பட்டியலை இங்கு குறிப்பிடமுடியாது. எதிர் காலத்திலும் உயர்ஸ்தானத்தில் உள்ளபலரைத் தோற்றுவித்து கல்லூரிக்கு பெருமை தேடிக் கொடுப்பர். உயர் நிலையில் உள்ளதோடுமட்டுமன்றி, பலராலும் நாடப்படும் கல்லூரியாகத் திகழும் சென். ஜோன்ஸ் அடுத்த நூற்றாண்டிலும் ஆயிரமாம் ஆண்டிலும் மேலும் வளர்ச்சி பெற்று அதி உன்னத நிலையை அடைய வாழ்த்துவோமாக.

அதிபர் திரு. எஸ். தனபாலன், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரை வாழ்த்துவதோடு சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கு இறையாசி என்றென்றும் கிடைப்பதாக.

கலாநிதி - ஏ. எஸ். தேவசகாயம்

தலைவர்,

ஆளுநர் சபை,

இலங்கைத் திருச்சபையின் பாடசாலைகள்.

## கல்லூரி அதிபரின் பாராட்டு

யாழ். பரி.யோவான் அகவை நூற்று எழுபத்தைந்தில் உவகையுறுகின்றது. இந்த உவகைக்குக் காரணம் இக்கல்லூரியின் ஆரம்பத்திற்கு வித்திட்ட வணக்கத்துக்குரிய யோசப் நைற் அவர்களே ஆவார்.

அடிகளார் அவர்களது பாதச்சுவட்டைத் தொடர்ந்து ஆயிரம் ஆயிரம் உத்தமர்களின் உள்ளத்துத் தூய்மையும், உயர்ந்த இலட்சியமும் இறைபலமுமே வரலாற்றுப் பாதையில் இக்கல்லூரி சந்தித்த பல சோதனைகளிலும் துவண்டு விடாது நின்று இன்றும் உலகின் உன்னத கல்லூரிகளில் ஒன்றாக பரி.யோவான் பரிணமிக்கின்றது.

யாழ். பரி.யோவானின் மட்டில்லா மகிழ்ச்சிக்குக் காரணம் அக்கல்லூரிக்கே உரிய தனிப்பண்பாகிய கல்லூரியின் பாரம்பரியம் பேணல் என்ற மன உறுதியே ஆகும்.

காலங்காலமாக இக்கல்லூரியின் அதிபர்களும், ஆசிரியர்களும், ஊழியர்களும், மாணவர்களும் பரி.யோவான் பாரம்பரியத்தை பரம்பரை பரம்பரையாக பாதம் தொடர்வதனால் எதிலும் ஏற்றமும், தெளிவும், இன்பமும் இயல்பாகவே கிடைத்து விடுகின்றன.

குறிப்பாக ஞாலமதில் பரி.யோவானின் பழைய மாணவர்களது மகத்தான கைங்கரியங்கள் இதற்கொரு நல்ல எடுத்துக்காட்டாகும்.

நூற்றிஎழுபத்தைந்தாண்டு நிறைவில் கல்லூரி மகிழ்வுறும் இவ்வேளை கல்லூரியின் அதிபர், உபஅதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள், பழையமாணவர்கள் ஆகிய நாம் அனைவரும் கல்லூரியின் உயர்ச்சிக்கு உறுதுணையாக நின்ற, நிற்கின்ற யாவோரையும் பாராட்டி, கல்லூரியை வாழ்த்தி வணங்குகின்றோம்.

எஸ். தனபாலன்,

அதிபர்,

யாழ். பரி.யோவான் கல்லூரி.

## ஞானத்தால் தலை நிமிர்வோம்

ஒருதேசத்தின் உண்மையான செல்வம் அதன் கல்விப் பெருக்கத்தில் தான் தங்கியுள்ளது.

ஞானத்தில் தலை நிமிர்ந்த கல்விச்சாலைகளும், மக்களுமே அழியாத சொத்துக்கள்.

கல்விச் செல்வத்தின் இந்தப் பெருமையை உணர்ந்தது யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணத்தின் கல்வி வரலாற்றில் தனித்துவமாக நிமிர்ந்து நிற்பது, எங்கள் பரி.யோவான் கல்லூரி (சென். ஜோன்ஸ் கல்லூரி).

அன்று 1823 இல், ஏழு பேருடன் நல்லூரில் தொடங்கிய சிறுபள்ளி, இன்று என்ன விதமாய் வளர்ந்திருக்கின்றது.

எத்தனை எத்தனை ஆளுமை விழுதுகளைத் தந்திருக்கிறது.

பண்பாட்டுணர்வும், புத்தாக்கச் சிந்தனையும் இசைய, 175 ஆண்டு கால சாதனையைக் கொண்டாடும் இந்த வேளை எங்கள் வாழ்வின் மிகப்பெரும் பேறு என்பேன்.

எங்களுக்கு இந்த வாழ்வைத் தந்த அத்தனை கல்வியாளர்களையும், இந்தப் பொழுதில் நினைந்து வழுத்துவோம்.

எல்லோர்க்கும் வாழ்வுதரும், எங்கள் சென். ஜோன்ஸ் அறிவொளி எங்கணும் பரவ துணையாவோம்.

கனகரத்தினம் கேசவன் ஜே. பி. யு. எம்,

தலைவர், பழைய மாணவர் சங்கம்,

பரி.யோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்.

## பல்லாண்டு வாழ்க!

எழிலுறும் கலைக்கோயிலாம் எங்கள் அன்னை பார்புகழ் பரி.யோவான் கல்லூரி, 175 அகவைஎய்திப் பொலிவுற்று விழாக் காணும் இந்நாள், இக் கல்லூரி சார் அனைவருக்கும் பெருநாளாம்.

அன்னையே! உன்கரத்தால் கலை நுகர்ந்து, நிலையுயர்ந்து, அகிலமெங்கும் புகழ்பரப்பும் மைந்தர்கள்எத்தனை எத்தனை, அவர் தம் உள்ளம் களிப்புறும் இவ்வேளை...

சொல்லிலடங்காப் பெறும் பேற்றால் பெருமையுற்று நீ காணும் பெருவிழாவில், உன்னைப் பல்லாண்டு பல்லாண்டு பார்சிறக்கப் பல்கலையில் பைந்தமிழில் பலம் மேவ, வாழ்க [illegible]

[illegible]

ஆசிரிய மன்றம்,

யாழ். பரி.யோவான்கல்லூரி.

## குருமுதல்வரின் வாழ்த்துச் செய்தி

''இருளில் ஒளிபிரகாசிக்கிறது.'' என்ற மகுட வாக்கியத்துடன் எமது பிரதேசத்தில் கல்விசார்ந்த ஒளியைப் பரப்பிக் கொண்டிருக்கும் பரி.யோவான் கல்லூரி இன்று தனது 175 –வது ஆண்டு நிறைவில்பிரகாசிப்பதையிட்டு மிக்க மகிழ்சியடைகின்றோம்.

இற்றைக்கு 175 ஆண்டுகளுக்கு முன்னர், தெரியாத ஓர் ஊரைத்தேடி வந்த ஆங்கில மிஷனரிகள் நம் முன்னோர்க்கு கல்விச் செல்வத்தை வழங்கிட அயராது முயற்சித்தனர். தங்கள் வியர்வை உழைப்பு அனைத்தையும் எம் மண்ணில் விதைத்து பரி.யோவானைக் கட்டியெழுப்பினர். அதன் வழிவந்த மிஷனரிகளும், அதிபர்களும், ஆசிரியர்களும், முகாமையாளர்களும் தங்கள் உழைப்பால் ஒளி போன்று கல்லூரியைப் பிரகாசிக்கச் செய்தது மட்டுமன்றி தங்கள் வாழ்வையும் கல்லூரிக்காக அர்ப்பணித்தனர்.

இன்றும் பரி.யோவான் தனக்கே உரித்தான கல்வி பாரம்பரியம், ஒழுக்கம் ஆகியவற்றில் சிறந்து விளங்குவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். இன்னும் அனேக நூற்றாண்டுகளுக்கு இவ்வொளி பரி. யோவானுக்கூடாக பிரகாசிக்க வேண்டுமென ஆண்டவரைப் பிரார்த்திக்கின்றேன்.

பரி. யோவான் குடும்பத்தினருக்கு என் வாழ்த்துதலைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

வண. செ. பி நேசகுமார்

(பிரதேச குரு முதல்வர், யாழ்ப்பாணம்.)

## சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அதிபரின் வாழ்த்து

யாழ். பரி.யோவான் கல்லூரி தனது நூற்று எழுபத்தைந்தாவது அகவையில் பூரிக்கும் வேளையில் அதன் சகோதர பாடசாலை அதிபர் என்ற முறையில் அக்கல்லூரியை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

1823இல் வணக்கத்துக்குரிய யோசெப் நைற் அவர்களால் ஆங்கில செமினரி ஆரம்பிக்கப்பட்டது. திருமதி காட்டர் அம்மையார் அவர்களால் 1896இல் பெண்களுக்கென ஒரு தனியான பிரிவு ஆரம்பிக்கப்பட்டு, இன்றைய எமது இடத்தில் பெண்கள் கல்லூரி அமையும்வரை யாழ். பரி. யோவானும, நாமும் இணைந்து ஒரு வளாகத்திலுள்ளேயே பணியைத் தொடர்ந்தோம். (இன்றும் நாய் இணைபிரியா நேசக்கரத்துடன் சேவையாற்றுகின்றோம்.)

எமது சகோதர பாடசாலையாகிய பரி,யோவான் தனது வளர்ச்சிப் பாதையில் பல சோதனைகளையும் காலத்தின் சுழற்சிகளையும் சந்தித்தாலும் இன்றும் கல்விக்கும், பிற செயற்பாடுகளுக்கும் ஒரு கலங்கரை விளக்காக நிற்கின்றது. காரணம் எமது திருச்சபையால் இது ஆரம்பிக்கப்பட்ட நோக்கமும், ஆரம்பித்தவர்களுடைய தூய உள்ளமும், இன்றுவரை அக்கல்லூரியின் அதிபர்களும். ஆசிரியர்களும், ஊழியர்களும், மாணவர்களும் அக்கல்லூரிக்காகத் தம்மை அர்ப்பணித்து ஆற்றும் சேவையுமேயாகும்.

இத்தகு பண்புகளால் உயர்ந்து விளங்கும் பரி.யோவான் இன்று போல் எனறும் புகழ் வீச எல்லாம் வல்ல இயேசு பிரானின் கருணையை பேண்டி அக்கல்லூரிக்கு எமது இதயங் கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் உவகை கொள்கின்றோம்.

திருமதி ரி. இராஜரத்தினம்,

அதிபர்,

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

**JOHN'S COLLEGE**
**JAFFNA**

OGRAMME FOR 175th
VERSARY CELEBRATIONS

1998 THURSDAY

| | |
|---|---|
| 30 | Holy Eucharist. Preacher and celebrant The Rt. Revd. K. M. J. FERNANDO. Bishop of Colombo. |
| 30 | Assembly. |
| 00 | Issue of Commemorative Stamp. |
| 45 | Felicitation of Tutorial & Non Tutorial staff. |
| 45 | Opening of New Block. |
| 00 | Lunch OBA, Jaffna ( Ticket ) |
| 3[illegible] | Laying of Foundation for new Administrative Block followed by meeting in Peto Hall. |
| 00 | Principal's Tea. |

1998 FRIDAY

| | |
|---|---|
| 00 | Opening of Science Block followed by Cricket Match |
| 0 | Cultural Programme at Peto Hall. |
| 0 | Tour of the College. |
| 0 | Football Match |

1998 SATURDAY

| | |
|---|---|
| 0 | Prize Giving at Peto Hall. Programme concludes with Principal's Speech. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்சார தொழில் நுட்பம்

வீடுகள், தொழிற்சாலைகள் என்பவற்றிற்கான மின் இணைப்பு வேலைகள், மின்மோட்டர்கள், மின் உபகரணங்கள், ரி. வி அன்ரனாக்கள் என்பவற்றில் ஏற்படும் குறைபாடுகளை சீர் செய்யவும், சகல விதமான பட்டரிகளை சார்ஜ் செய்யவும் தொடர்பு கொள்ளுங்கள்:

நா. கந்தையா
ஓய்வு பெற்ற மின் உத்தியோகத்தர்.

மருதன் குள வீதி,
[கிளை இல, 08 சங்கத்தடி]
மட்டுவில் தெற்கு
சாவகச்சேரி.

(சி/ 3667)


## சர்வதேச லயன்ஸ் கழகம்

மாவட்டம் 306 பி ஸ்ரீலங்கா

ஜூன் மாத நடுப்பகுதியில் யாழ். நகரில் பிராந்தியம் 8 இன் லியோக்களின் எழுச்சி விழா

### "லியோ கருத்தரங்கு"

இந்நிகழ்வையொட்டி
மாவட்ட லியோ தலைவரால்
நடத்தப்படும்

லியோ கழகங்கள் உள்ள பாடசாலை மாணவர்களும் லியோ கழக உறுப்பினர்களும் பங்கு கொள்ளும்

### "மேசைப் பந்தாட்ட போட்டி"

யாழ். நகரில் மக்களின் அபிமானத்தையும் நம்பிக்கையையும் பெற்ற 22 கரட் தங்க நகை வியாபார நிறுவனங்களான

**சாரங்கா நகை மாடம்**
**அருள் முருகன் நகையகம்**
**சிவா நகை மாடம்**

என்பவற்றின் அனுசரணையுடன் நடைபெறும். இப்போட்டியின் பரிசுகள்

**வெற்றிக் கிண்ணங்கள்**

சான்றிதழ்களுடன் பரிசாக வழங்கப்படவுள்ளன.

போட்டி விதிகள்

1. லியோ கழக உறுப்பினர்களும், லியோ கழகங்கள் இயங்கும் பாடசாலை மாணவர்களும் பங்கு பற்றலாம்.
2. போட்டியில் பங்கு பற்றுவோர் தமது விண்ணப்பங்களை 14—05—1998 ஆம் திகதிக்கு முன்னர் ''தலைவர்'', ''லியோ கழகம்'' சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
3. போட்டிகள் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் 1998-05-22ஆம்திகதி பிற்பகல் 2-30மணிக்கு நடைபெறும்.
4. போட்டிகள் பற்றிய மேலதிக விவரங்களை பெற விரும்புவோர் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி லியோ கழகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

போட்டி ஒழுங்கமைப்பு

### லியோ கழகம்

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.

லயன் பா. தவபாலன்
மாவட்ட லியோ தலைவர்,
சர்வதேச லயன்ஸ் கழகம்,
மாவட்டம் 306 பி
ஸ்ரீலங்கா


விளம்பர அன்பளிப்பு:

யாழ். நகரில் 22 கரட் தங்க நகைகளில் மகத்தான நிபுணத்துவம் பெற்றவர்கள்

இன்றைய நாகரிக பெண்களின் விருப்பிற்கேற்ப புதிய டிசைன் நகைகளை உடனுக்குடன் செய்து கொடுத்து பெண்கள் மத்தியில் யாழ். நகரில் முன்னணி இடத்தைப் பெற்ற முத்தான 3 நிறுவனங்கள்

**சாரங்கா நகை மாடம்**
இல 177/4, கஸ்தூரியார் வீதி,

**அருள்முருகன் நகையகம்**
இல. 96/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**சிவா நகை மாடம்**
யாழ். வீதி, சாவகச்சேரி.

(சி/3664)


## தவறிவிட்ட அ.அட்டை ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், மே 7

''செல்வபுரம், பளை'' என்னும் முகவரியில் வசிக்கும் சங்கரன் குணசீலா என்பவரின் விசேட அடையாள அட்டையும், ஒரு தொகைப் பணத்துடன் கூடிய பேர்ஸ் ஒன்றும் யாழ். ஆஸ்பத்திரிப் பகுதியில் கண்டெடுக்கப்பட்டு ஆஸ்பத்திரி பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

உரியவர் தகுந்த அடையாளம் காட்டி இவற்றைப் பெற்றுகொள்ளுமாறு யாழ். ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஐ–7)

## இசை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், மே 7

'புளொட்' அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட இசைத் தேனமுதம் என்னும் இசை நிகழ்ச்சி இன்று வியாழக்கிழமை இரவு நெடுந்தீவில் நடைபெறவுள்ளது.

பிரபல பாடகரும், நடிகருமான ஏ.ஈ. மனோகரன் இந்த இசை நிகழ்ச்சியில் கலந்து கொள்கிறார். (ஐ)

## மேலதிகநேர வேலை கொடுப்பனவு

உரும்பிராய் அஞ்சலகப் பணியாளர்களுக்குரிய கடந்த டிசெம்பர், ஜனவரி மாதங்களுக்கான மேலதிக நேர வேலைக் கொடுப்பனவுகள் பல மாதங்களாகியும் இன்னும் வழங்கப்படவில்லை.

கிறிஸ்மஸ் காலத்திலும், உள்ளூராட்சித் தேர்தல் காலததிலும் விடுமுறைதினங்களில் கடமையாற்றியதற்கான கொடுப்பனவுகளே நிலுவையாக உள்ளன. மேற்படி அஞ்சலகத்தின் அதிபர் உட்பட ஆறு பணியாளர்கள் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர். (ஐ–154)

## கலை விழா

கோப்பாய் ஐக்கிய விளையாட்டு கலாசாரக் கழகம் நடத்தும் கலைவிழா நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி கலை அரங்கில் கழகத்தலைவர் இ. கிருபராசா தலைமையில்நடைபெறவுள்ளது. கலை விழாவில் யாழ். வர்த்தக வங்கி முகாமையாளர் ப.ரஜீவன் பிரதம விருந்தினராகவும், கோப்பாய் வடக்கு றோ.க.த.க பாடசாலை அதிபர் க. விநாயகலிங்கம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

விழாவில் நடனம், வயலின், மிருதங்கஇசை முதலிய கலை நிகழ்ச்சிகள் சிறப்பு நிகழ்ச்சிகளாக இடம் பெறவுள்ளன. [ஐ–7]

## வாராந்த சொற்பொழிவு

கொழும்புத்துறை மே 7

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் அருள்மிகு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய சுற்றாடலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வைத்தியகலாநிதி வ. சின்னப்பு ''ஆலயமூர்த்திகளும் அதன்தத்துவங்களும்' என்ற தலைப்பில் சமயச் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

இந் நிகழ்விற்கான அறி [illegible] நிகழ்த்துவார்.

(ஐ – 30 – 173)


## பிற்போடப்பட்டுள்ளது

உரும்பிராய் சரஸ்வதி சனசமூக நிலைய பாடசாலை வளர்ச்சி நிதிக்காக 04 - 05 - 98 நடைபெறவிருந்த சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் நடைபெறவில்லை. அது 07 – 07 - 98 அன்று நடைபெறுமென்பதனை அறியத்தருகின்றோம்.

[55800] -தலைவர்


## அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ மாணவர் மன்றத்தால் 05 - 05 – 98 அன்று நடத்தப்பட்ட சீட்டிழுப்பு முடிவுகள் வருமாறு.

| பரிசு | அதிர்ஷ்ட இலக்கம் |
|---|---|
| 1 ஆம் பரிசு | 19580 |
| 2 ஆம் பரிசு | 06060 |
| 3 ஆம் பரிசு | 18638 |

ஆறுதல் பரிசில்கள்:

| | | | |
|---|---|---|---|
| 02790 | 08707 | 17375 | 16190 |
| 12294 | 19904 | 03671 | 06674 |
| 11714 | 11864 | | |

அதிர்ஷ்ட சாலிகள் 05 – 06 – 98 இற்கு முன்னதாக பற்றுச் சீட்டுடன் முகாமைத்துவ மாணவர் மன்றத்துடன் தொடர்பு கொண்டு பரிசில்களை பெற்றுக் கொள்ளவும்.

முகாமைத்துவ மாணவர் மன்றம்
யாழ். பல்கலைக்கழகம்.

[55802]

## இதய அஞ்சலி

காங்கேசன்துறை மக்கள் வங்கி ஊழியர்
திருமதி எம். ஏ. எஸ் சிவலிங்கம்
அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி றெஜீனா நாகம்மா ஞானப்பிரகாசம்**

அவர்கள் 20—04—98இல் காலமானது பற்றியும்,
வல்வெட்டித்துறை மக்கள் வங்கி ஊழியர்
செல்வி பர்வதகுமாரி பொன்னம்பலம்
அவர்களின் அன்புத் தாயார்


**திருமதி புனிதவதி பொன்னம்பலம்**

அவர்கள் 02-05-98இல் காலமானது பற்றியும் அறிந்து அதிர்ச்சியும், ஆழ்ந்த துயரமும் அடைகின்றோம். அவர்களுக்கு எமது இதய அஞ்சலியைச் செலுத்துகின்றோம். அவர்களின் பிரிவால் துயறுரும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
மக்கள் வங்கி, பருத்தித்துறை.

(சி/3672)

## ஓராண்டு நினைவு ஆராதனை



தேவஊழியன்
**செபஸ்ரியாம்பிள்ளை அன்ரனிமில்ஸ்**
(றதீஸ்-பாசையூர்)

ஓராண்டு நினைவு ஆராதனை 08–05–98 காலை 9 மணிக்கு இல. 21, கச்சேரி நல்லூர் வீதியிலுள்ள யாழ். எக்காளத்தொணி பூரண சுவிசேஷ சபையில் நடைபெறும்.

அன்பர்கள், அனைவரையும் இதில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கினறோம்.

— குடும்பத்தார்

அன்னாரின் தினக்குறிப்பிலிருந்து:

''ஒரே ஒரு வாழ்க்கை அது விரைவில் ஓடி மறையும்; கிறிஸ்துவுக்காகச் செய்வது எதுவோ அது மட்டுமே என்றும் நிலை நிற்கும்.''

(55805)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்

### இராசையா சோமசுந்தரம்

(''பாலன் மில்ஸ்'' உரிமையாளர்)

தோற்றம்: **08 — 12 — 1932** மறைவு: **05 — 04 — 1998**

எம்குடும்பத்தலைவரே! எங்களை விட்டுச்சென்று மாதம் ஒன்றாகிலும் உங்கள் பாசமும் அன்பு நினைவும் எங்கள் உள்ளத்தில் என்றும் இதயத் தெய்வமாக வீற்றிருக்கும். உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

மற்றும் அன்னாருக்கு பலவழிகளில் உதவி செய்தவர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் எங்களது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

பிரிவால் துயருறும்;
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

வட்டு. மேற்கு,
வட்டுக்கோட்டை.

(55788)

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு: 21 — 05 — 1913



உதிர்வு: 08 — 04 — 1998

திருமதி

### கதிர்காமத்தம்பி பூலச்சுமி

எமது அன்புத்தாயார் திருமதி கதிர்காமத்தம்பி பூலச்சுமி அவர்கள் 8-4-1998 இல் சிவபதமெய்திய செய்திகேட்டும், அறிந்தும் எமது இல்லம் நாடி வந்தும், இறுதிக்கிரியைகளில் கலந்தும், உதவி ஒத்தாசை புரிந்தும் அனுதாபச் செய்திகளை அனுப்பிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவிப்பதுடன் 8-5-1998 வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிக்கு சுப்பர் மட அந்தியேட்டி மண்டபத்தில் அந்தியேட்டிக் கிரியைகள் முடிவுற்றதும் அன்னாரின் இல்லத்தில் நிகழும் சபிண்டீகரணக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து சிறப்பித்தேகுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பணிவோடும், அன்போடும் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

அன்பு மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
இ. சேயோன்.
(பேரப்பிள்ளை)

235/1, வி. எம். றோட்,
பருத்தித்துறை.

(சி/ 3629)

# வடமராட்சி கிழக்கு விவசாயிகளின் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும்

## அமைச்சுச் செயலாளருக்கு மகஜர்

யாழ்ப்பாணம்மே 7

வடமராட்சி கிழக்கில்பாதுகாப்பு அரணுக்கு வெளியே வசிக்கும் மக்கள் விவசாய விளைபொருள்களை உரிய காலத்தில் சந்தைப்படுத்த முடியவில்லை அத்தோடு விவசாயத்திற்குத் தேவையான உள்ளீடுகளை அப்பகுதிகளுக்கு எடுத்துச் செல்லவும் அனுமதியில்லை. இந்நிலையை மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம்.

வடமராட்சி கிழக்குப் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் வடக்கு-கிழக்குமாகாண விவசாய, காணி, கூட்டுறவு கால்நடை அமைச்சின் செயலாளர் எஸ். ரி. மார்க்கண்டுவிடம் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடந்த மாதம் 21ஆம் திகதி யாழ் செயலகத்தில் நடைபெற்ற யாழ். மாவட்ட விவசாயிகள் விவசாய சம்மேளன பிரதிநிதிகள் ஆகியோருடனான கலந்துரையாடலிலேயே இவ்வேண்டுகோள்விடுக்கப்பட்டது,

மருதங்கேணி, நாகர்கோயில், அம்பன், குடத்தனை, செம்பியன்பற்று பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களின் பிரதான தொழில் விவசாயம். ஆனால்இப்பகுதிகளில் வாழும் விவசாயிகள் உரிய காலத்தில் தமதுவிளைபொருள்களைச் சந்தைப்படுத்த முடிவதில்லை.

பாதுகாப்பு அரண்களில் மேற் கொள்ளப்படும் அதிதீவிர சோதனைகளின் போது விளைபொருள்கள் அடிக்கடி நிலத்தில் கொட்டப்படுகின்றன— இதனால் அவை விரைவில் பழுதடைந்து விடுகின்றன.

அதுமட்டுமன்றி வடமராட்சிப் பகுதியில் இருந்து பருத்தித்துறைக்கோ அல்லது கொடிகாமத்துக்கோ கொண்டு செல்வதற்குப் போதிய வாகன வசதிகள் இல்லை. நீண்ட தூரம் சைக்கிளிலேயே பயணம் செய்ய வேண்டியுள்ளது.

அத்தோடு விவசாயத்திற்குத் தேவையான விவசாய உள்ளீடுகளை எமது பகுதிகளுக்கு கொண்டு செல்வதற்குப் பெரும்பாலும் தடைவிதிக்கப்படுகின்றது. சில வேளைகளில் வரையறையான உள்ளீடுகள் கொண்டு செல்வதற்கு அனுமதி வழங்கப்படுகின்றது.

இந்நடவடிக்கைஎமது விவசாயத் தொழில் முற்றாக ஸ்தம்பிதநிலையை அடைவதற்கு வழிவகுக்கின்றது. விவசாயத்திற்குத் தேவையான மண்எண்ணெயையும்தாராளமாகக் கொண்டு செல்வதற்கு அனுமதி வழங்கப்படல் வேண்டும்.

இவ்வாறான கோரிக்கைகளை வடமராட்சி கிழக்கு விவசாயிகள் மாகாண விவசாய அமைச்சின் செயலாளரிடம் முன்வைத்தனர்.

விவசாயிகளின் போக்குவரத்து தொடர்பாகவும், சந்தைப்படுத்தல் தொடர்பாகவும் படைத்தரப்பினருடன் ஆலோசித்து முடிவு எடுப்பதாக மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் எஸ். ரி. மார்க்கண்டு உறுதியளித்தார். (ஐ-7)

## நல்லூர் செயலர் பிரிவில்

## கோயில்கள், பாடசாலைகளுக்கு 15 லட்சம் ரூபா ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், மே 7

இந்த ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் நல்லூர் பிரதேச செயலர் பிரிவிலுள்ள சில பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், கோவில்கள் ஆகியவற்றின் புனருத்தாரணத் திட்டங்களுக்கென 15 லட்சத்து 40 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கல்வியங்காடு இந்து தமிழ் கலவன் பாடசாலை, கொக்குவில் நாமகள் வித்தியாலயம், கனகரத்தினம் மகாவித்தியாலயம், ஆகிய மூன்று பாடசாலைகளின் பல்வேறு திட்டங்களுக்கென 8 லட்சம் ரூபாவும் —

கொக்குவில் மத்தி சனசமூக நிலையம், நல்லூர் வடக்கு கலைமகள் சனசமூக நிலையம், நல்லூர் வடக்கு விநாயகர் விளையாட்டுக்கழகம் ஆகியவற்றின் புனருத்தாரணத் திட்டங்களுக்கு ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாவும் —

திருநெல்வேலி சிவகாமசுந்தரி அம்மன் கோயில், கலட்டி வீரகத்திவிநாயகர் கோவில், கொக்குவில் நந்தாவில் அம்மன் கோயில், கொக்குவில் கிருபாகரசிவசுப்பிரமணியர் கோயில் ஆகியவற்றின் புனருத்தாரண செயற்றிட்டங்களுக்கு 6 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக நல்லூர்ப் பிரதேச செயலாளர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-7)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம். மே 7

காரைநகர் - கருங்காலி போசுட்டி முருகமூர்த்தி ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு ஸ்ரீ சண்முகானந்த சபை நடத்தும் தொடர்சமயச் சொற்பொழிவில் இன்று கல்வி வலயம் ஒன்றைச் சேர்ந்த முதன்மைஆசிரியர் பிரம்மஸ்ரீ ம. ஜெயராமசர்மா ''திருப்பம்'' என்னும் பொருளில் சொற்பொழிவாற்றுவார்.

நாளை வெள்ளிக்கிழமை ஊர்காவற்றுறை பிரதேச சபை நிர்வாக அலுவலர் க. பாலசுப்பிரமணியம் 'கந்தரனுபூதி'' என்னும் பொருளில் சொற்பொழிவாற்றுவார். (ஐ-7)

## மாணவிக்கு கௌரவம்

பெறுமதி மிக்க தங்கநகை ஒன்றைப் பாடசாலை வளவில் இருந்து கண்டெடுத்து அதிபர் மூலமாக உரியவரிடம் சமர்ப்பித்த மாணவி ஒருவர் தங்கப்பதக்கம் சூட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

மேற்படி சம்பவம் கடந்த மாத இறுதியில் கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தில் இடம் பெற்றது.

தமது பிள்ளைகளின் கல்வி தொடர்பாக அதிபருடன் பேச வந்த தாயார் ஒருவர் இரண்டு சிறிய பெண்ரன்களுடன் கூடிய இரண்டரைப்பவுண் தங்கச்சங்கிலி ஒன்றை கடந்த முதலாம் தவணைப் பரீட்சைக்காலத்தில் மேற்படி பாடசாலை வளவில்தவறவிட்டிருந்தார்.

அவ்வேளை மேற்படி பாடசாலையின் 10 ஆம் ஆண்டு மாணவியான செல்வி எஸ். கோபிகா அச்சங்கிலியைக் கண்டெடுத்து அதிபரிடம் ஒப்படைத்திருந்தார்.

அவரது செயலைக் கௌரவிக்கும் முகமாக மேற்படி வித்தியாலய அதிபர் [illegible] தங்கப்பதக்கம் சூட்டிக் கௌரவித்தார். (ஐ-7)

## நல்லிதய நன்றியும் மோட்சதீபநன்னாள் (அந்தியேஷ்டி) அறிவித்தலும்

அல்வாய் தெற்கு ஓய்வுபெற்ற ஆசிரியை

திருமதி

### நாகம்மா றெஜீனா ஞானப்பிரகாசம்

அவர்களது மரணவேளையில் சமுகமளித்து ஆன்ம சாந்தி ஆசி அருளிய அருட்குரவர்கள், துறவிகள், சங். கன்னியர்கள், செபத்தியானஞ் செய்தோர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், மக்கள் வங்கி முதல்வர்கள், பணியாளர்கள், பல்கலைக்கழக ஆசிரிய மாணவர்கள், யாழ்ப்பாணம், நெடுந்தீவு, அல்வாய், கரவெட்டி, கொடிகாமம், கொழும்பு ஆதியாம் இடங்களிலிருந்து வந்து சமுகமளித்தோர், அனுதாபச் செய்திகள் அறிவித்தோர், யாழ். பேராலயத்தில் திருப்பலி, இரங்கலுரை வழங்கிய அருட்குரவர்கள் அங்கிருந்து அல்வாய் தெற்கு, கரவெட்டிச் சேமக்காலை வரையும் ஆன்மநேய உதவி செய்தோர், இன்னுஞ் சந்தர்ப்பம் நோக்கிச் சாலவும் உதவிய மெய்யன்பர்கள் சகலர்க்கும் இறையருளால் எம் நல்லிதய நன்றியைச் சமர்ப்பிக்கின்றோம். மேலும் அன்னாரின் மோட்சதீப (அந்தியேஷ்டி) நிகழ்ச்சிகளை அவரின் சொந்த இல்லமாகிய அல்வாய் தெற்கு, ''இராணி மனை''யில் நடத்தவும் தீர்மானித்திருக்கின்றோம். அத்திகதியைப் பின்னர் அறிவிப்போம். இறுதியாத்திரையின் போது உளங்கலந்து உதவியோரும், ஏனையோரும் இதனை ஏற்றுக்கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

க. த. ஞானப்பிரகாசம் [கணவர்],
அன்பு மக்கள், மருமக்கள், பேரர்கள்.

''இராணி மனை''
அல்வாய்தெற்கு,

(55795)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

40அடி நீளமான மெசாக் கட்டான் தகரப்பந்தலும், 200 கதிரைகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: சி. தேவராசா, நுணாவில்கிழக்கு. கல்வயல். சாவகச்சேரி. [சி/3643]

### FOR SALE

Sony KV 20 - 20 Colour T.V. With Original Formica Cabinet and Ladies Lumala Bicycle Inspection - any Day contact: No. 91, Brown Road, Jaffna. (55777)

### உடன் விற்பனைக்கு

பிறிமா கைலன் பிறவுண் ஒருநாள் பேட்டுக்குஞ்சுகளும், பிறவுண் சேவல் குஞ்சுகளும் உடன் விற்பனைக்கு உண்டு. ''மல்லிகாபதி'' மார்க்கற்கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். [55791]

### தவறிவிட்டது

ஆசீர்வாதம்மேரி அமெசம்ரா ஆகிய எனது விசேட அடையாள அட்டை பாண்டியன் தாழ்வுக்கும், யாழ். நகருக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 18/9, கொழும்புத்துறைவீதி, பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். [55782]

### வீடு வாடகைக்கு

வைமன வீதியில இல. 37/1, 37/2-க்கு உரிய இரண்டு வீடுகள் வாடகைக்கு கொடுக்கப்படும். தொடர்பு; T. தம்பிநாதன், 37/1, வைமன் வீதி, யாழ்ப்பாணம் (தினசரி காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை சந்திக்கலாம்). [சி/3666]

### மணமகள் தேவை

1963 ஆம ஆண்டு ரோகிணி நட்சத்திரம், செவ்வாயற்ற, வாய்பேசமுடியாத அச்சக வேலை புரியும் மணமகனுக்கு அதேநிலையுடைய மணப்பெண் தேவை. தொடர்பு: துர்க்கா திருமண சேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [55785]

### ஆங்கிலம் விசேடமாக

O/L பரீட்சையில் Distinction Credit பெறுபேறடையவும், G, A. Q (Spoken English உட்பட) ஆண்டு 8– 10 வரை கற்பிக்கப்படும். பலவருட அனுபவமுள்ள B. Sc ஆசிரியா, 85, சிவன் கோயிலடி, சிவன்கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. (55774)

### ஆங்கிலக்கல்வி

ஆங்கிலத்தில எழுத, வாசிக்க, கதைக்க, கடிதம் எழுத சுலபமான முறைப்படி பயிற்சி கொடுக்கப்படும். வாரம் நான்கு வகுப்புகள் ஆசிரியர் ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (362), காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். (55793)

## படகு சேவை ஸ்தம்பிதம்

நெடுந்தீவு, மே 7

ஊர்காவற்றுறை, எழுவைதீவு, நயினாதீவுப்பகுதிகளுக்கான கடற் போக்குவரத்துச் சேவையில் உள்ள தேவாரதம் மோட்டார்ப்படகு கடந்த சில வாரங்களாகச் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் பொதுமக்களும், அரச ஊழியர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். படகு ஊழியர்களுக்கு வேதனம் வழங்கப்படாமையே சேவை ஸ்தம்பிதமடையக் காரணம் எனத் தெரியவருகிறது. [ஐ-111]

---

# அகில உலக செஞ்சிலுவைத் தினம்

08 - 05 - 1998

இத்தினத்தில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைத் தலைமையகத்தில் கீழ் வரும் நிகழ்ச்சிகள் நடைபெறும்.

காலை நிகழ்ச்சி

[மு. ப. 8.30 - 11.00 வரை]

இலவச நீரிழிவு கிளினிக்

இதைத் தொடர்ந்து உணவு முறை, தேகப்பயிற்சி மருந்து வகை பற்றிய கருத்தரங்கும், ''நீரிழிவினைக் கட்டுப்படுத்தி சுகவாழ்வு பெறும் ஆலோசனைகள் கொண்ட விவரக் கொத்துகளும் நோயாளர்களுக்கு வழங்கப்படும்.

மாலை நிகழ்ச்சி

[பி. ப. 3.30 - 6.00 வரை] கலாசார நிகழ்ச்சி

பிரதம விருந்தினர்:

திரு. கோ. சி. சிவமகராஜா

(தலைவர், இ. செ. ச. தெல்லிப்பழைப் பிரிவு)

பாட்டு, பரத நாட்டியம், வில்லுப் பாட்டு, உலக செஞ்சிலுவைச் சங்க பொது அறிவுப் போட்டியில் பரிசு பெற்ற மாணவர்களுக்கு பரிசு வழங்கல்.

யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்,

கௌரவ செயலாளர்,

இ. செ. ச. யாழ். கிளை

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/3636)

---

# நன்றி நவிலல்

சிவஸ்ரீ

## ச. பா. வைத்தியநாத சிவாச்சாரியார்

இறைவன் திருவருளால் எங்கள் குடும்பத்தின் தலைவராகவும், சிவாச்சாரியராகவும், சிவபூஜா துரந்தரராகவும் வாழ்ந்து எண்ணிலாக் கடமைகளால் எல்லோர் இதயக் கமலங்களையும் மலர்த்தி சிவபதம் அடைந்த அன்னாரின் மறைவு கேட்டு ஆறுதலளித்து கருமம் ஆற்றிய அன்பு நெஞ்சங்களுக்கும், இறுதிக்கிரியை, ஆத்மசாந்தி, பிரார்த்தனை இவற்றுள் கலந்து சிறப்பித்த உற்றார், உறவினர், பெரியோர்கள், நண்பர்கள், உள்நாடு, வெளிநாடுகளில் இருந்து அனுதாபச் செய்திகளை அனுப்பியவர்களுக்கும், கீரிமலை புனித தீர்த்தத்தில் அஸ்தி, திருவுருவச்சின்னம் இவற்றினை சேர்ப்பிப்பதற்குரிய ஒழுங்குகளை மேற்கொண்ட மாவை கந்தசுவாமி கோயில் பிரதமகுரு மகாராஜஸ்ரீ. சு. து. சண்முகநாதக் குருக்களுக்கும், அனுமதி வழங்கிய கே. கே. எஸ். படை நிர்வாகப் பொறுப்பாளர் லெப்டினன்ட் சேனக்காவுக்கும், குறுகிய நாளில் நினைவு மலரினை அச்சிட உதவிய சாந்தி அச்சக உரிமையாளர் நாகரத்தினம், பொஸ்கோ அச்சக உரிமையாளர், ஊழியர்களுக்கும் எமது மனம் நிறைந்த நன்றி உரித்தாகுக.

அன்பிற்கினிய

பிரம்மஸ்ரீ வை. சபேஸ்வரசர்மா,
ஊரெழு.

(55776)

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி வேலாயுதம்பிள்ளை நாகரெத்தினம்**

திதி:- 07 — 05 — 1998

எம் அன்னையே பக்கத்தில் நீயிருந்தபோது
சொர்க்கத்தை உன்னில் கண்டோம்
சொர்க்கத்துள் நீ நுழைந்த போது
துக்கத்தை எம்மில் கண்டு ஆண்டொன்று ஆகிறது!

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்;

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,

''கந்தையா வளவு'',
259, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(55778)

---

உ

# திருமண அழைப்பு

மணமகன்: பிரம்மஸ்ரீ ச. சிவசுதசர்மா
(ஆசிரியர், தொல்புரம் அ. மி. த. க., பாடசாலை)

மணமகள்: செல்வி மா. மாலினி
(ஆசிரியை, வவு/விபுலானந்த ம. வி., பண்டாரிக்குளம்)

இடம்: ''ஸ்ரீ வித்யா'' இணுவில் கிழக்கு, சுன்னாகம்.

காலம்: 08 - 05 - 1998 வெள்ளிக்கிழமை
காலை8. 20 - 10. 10

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

சிவஸ்ரீ சாம்பசிவ. சோமசபேசக் குருக்கள்
பிரதமகுரு இணு/சிவகாமி அம்மன் கோயில்.

[55790]

---

# சர்வதேச லயன்ஸ் கழகம்

மாவட்டம் 306 பி ஸ்ரீலங்கா.

ஜூன் மாத நடுப்பகுதியில் யாழ். நகரில் பிராந்தியம் 8 இன் லியோக்களின் எழுச்சிவிழா

## லியோ கருத்தரங்கு

இந் நிகழ்வையொட்டி
மாவட்ட லியோ தலைவரால் நடத்தப்படும்
லியோ கழகங்கள் இயங்கும் பாடசாலைகளின் ஆண்களுக்கான

**கரப்பந்தாட்டப் போட்டி**

யாழ். நகரில் அழகாக வடிவமைக்கப்பட்ட மக்கள் இதயம் கவரும்

**மகாநதி** புடைவை அகம்

முகூர்த்தப்பட்டுப் புடைவைகளுக்கு அதிர்ஷ்டமான நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெறும் இப்போட்டியில்

**வெற்றிக் கிண்ணங்கள்**

சான்றிதழ்களுடன் பரிசாக வழங்கப்படவுள்ளன.

போட்டி விதிகள்:-

1. லியோ கழகங்கள் இயங்கும் ஆண்கள் பாடசாலைகள் பங்கு பற்றலாம்.
2. வீரர்கள் பாடசாலையில் கல்வி ஆண்டில் உள்ளவராகவும், 21 வயதிற்குஉட்பட்டவராகவும் இருத்தல் அவசியம்.
3. ஒரு பாடசாலையில் இருந்து ஒரு அணிமட்டும் கலந்து கொள்ளலாம்.
4. போட்டியில்கலந்துகொள்ளும் பாடசாலைகள்தங்கள் விண்ணப்பங்களை 14-05-1998 ஆம் திகதிக்கு முன்னர் ''தலைவர்'' லியோ கழகம், யாழ். மத்திய கல்லூரி என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபாலிலோ அனுப்பி வைக்கவும் (அணி வீரர்கள் பெயர்ப்பட்டியல் போட்டியின் போது சமர்ப்பிக்கலாம்)
5. போட்டிகள் 18-05-1998, 19-05-1998 மத்திய கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 2.30 மணி (புதிய நேரம்) ஆரம்பமாகும்.
6. போட்டியில் நடுவரின் தீர்ப்பே இறுதியானது.
7. மேலதிக விவரங்களுக்கு யாழ். மத்திய கல்லூரி லியோ கழகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

போட்டி ஒழுங்கமைப்பு

## ''லியோ கழகம்''

யாழ். மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.

லயன் பா. தவபாலன்
மாவட்ட லியோ தலைவர்,
சர்வதேச லயன்ஸ் கழகம்,
மாவட்டம் 306 பி,
ஸ்ரீலங்கா.

விளம்பர அன்பளிப்பு:

கண்ணைப் பறிக்கிறது என்னை இழுக்கிறது வண்ணம் நூறுவிதமோ விண்ணோடும் மண்ணோடும் இல்லாத வண்ணங்கள் பட்டோடும் நூலோடும் அளிக்கிறது.

நதிகளின் சங்கமம் கடலிலே சகல விதமான புடைவைகளின் சங்கமம்

# மகாநதி

பட்டுப் புடைவைகளுக்கு கைராசியான நிறுவனம்.

இல. 16,நவீனசந்தை, யாழ்ப்பாணம்.
இல. 4,நவீனசந்தை, சாவகச்சேரி.

(சி/3665)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உபநயன விழா ஒத்திவைப்பு

நாளை 08-05-98 வெள்ளிக்கிழமை நடைபெற இருந்த எனது மகன்

**ஜகஜீவ சர்மா அவர்களின்**

உபநயன விழா தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சிவஸ்ரீ ச.ஸ்ரீசண்முகானந்தக்குருக்கள்
மயிலணி. (சி/3675)

# இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
## யாழ். கிளை

அகில உலக செஞ்சிலுவைச் சங்கத் தினத்தை முன்னிட்டு மாணவர்களுக்கான 03 - 05 - 98 இல் நடைபெற்ற செஞ்சிலுவைச் சங்க பொது அறிவுப் போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகள்.

முதலாவது பரிசு:
சிவகணேசன் மகிந்தன்
(மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்)

இரண்டாவது பரிசு:
சிவசுப்பிரமணியம் செந்தில்குமரன்
(வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்)

மூன்றாவது பரிசு:
சுகுணலிங்கம் ரமேஸ்
(கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்)

ஆறுதல் பரிசு பெறுவோர்:

| | |
|---|---|
| மைதிலி கணேசமூர்த்தி | (சாவகச்சேரி மகளிர் கல்லூரி) |
| சிவலிங்கம் ரமணன் | (அச்சுவேலி மகா வித்தியாலயம்) |
| சிவதர்சினி இராசலிங்கம் | (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) |
| சிவசாந்தினி சின்னத்தம்பி | (சாவகச்சேரி மகளிர் கல்லூரி) |
| இராசதுரை திலீபன் | (சாவகச்சேரி இந்துக் கல்லூரி) |
| குலசேகரம் சுகந்தன் | (சாவகச்சேரி இந்துக் கல்லூரி) |
| V. தமயந்தி | (வட்டு. இந்துக் கல்லூரி) |
| A. Jude Lester Roni | (ஹாட்லிக் கல்லூரி பருத்தித்துறை) |
| கிருபாநிதி கிருஷ்ணானந்தன் | (ஞானாசாரியார் கல்லூரி, கரவெட்டி) |
| இரசிதா கதிரமலை | (விக்ரோறியாகல்லூரி, சுளிபுரம்) |

இதற்கு மேலாக ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் தோற்றிய மாணவர்களில் கூடிய புள்ளிகள் பெற்ற மூவருக்கான சான்றிதழ்கள் அந்தந்தப் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

கௌரவ செயலாளர்,
**இ. செ. சங்கம், யாழ். கிளை.**
73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். (சி/3671)

# கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே 7

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய உயர்தர மாணவர் மன்றத்தின் ஏற்பாட்டில் உயர்தர வகுப்பினருக்கான தமிழ்ப் பாடக் கருத்தரங்கு இன்று காலை 11.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

''நாகம்மாள் நாவல் ஓர் அறிமுகம்'' என்னும் பொருள் பற்றி மானிப்பாய் இந்துக் கல்லூரி சிரேஷ்ட ஆசிரியை திருமதி கிருபா பவசிங்கம் விரிவுரையாற்றுவார். (உ-3)

# இன்று

யாழ்ப்பாணம், மே 7

நவாலி தெற்கு ஸ்ரீஞான வைரவர் ஆலய அலங்கார உற்சவம் இன்று ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாள்கள் இடம்பெறும். பத்தாம்நாள் —எதிர்வரும் 16 ஆம் திகதி— சனிக்கிழமை காலை முதல் அஷ்டோத்தர சங்காபிஷேகமும், மகேஸ்வர பூசையும் இடம்பெறும். (உ-139)

# தலையில்லா சடலம் ஒதுங்கியது

கொழும்புத்துறை கடற்பகுதியில் தலை இல்லாமல் ஒதுங்கியதாகத் தெரிவித்து ஆண் ஒருவரின் சடலம் உருக்குலைந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை பொலீஸாரினால் யாழ். ஆஸ்பத்தியில் ஒப்படைக்கப்பட்டது.

சடலத்தில் நீலநிற அரைக் காற்சட்டை காணப்பட்டது.

சடலம் இனம் காணும் பொருட்டு பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (உ-135)

# 35 பொதிகளில் தபால்கள் வந்தன

யாழ்ப்பாணம், மே 7

யாழ். மாவட்டத்துக்குரிய வெளியூர் தபால்கள் அடங்கிய 35 தபாற்பொதிகள் நேற்று புதன் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் யாழ். எடுத்துவரப் பட்டன.

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து சேகரிக்கப்பட்ட தபால்கள் அடங்கிய 12 தபாற்பொதிகள் நேற்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் திருமலைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. (உ-7)

# விரிவுரை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மே 7

யாழ். மத்திய கல்லூரி வணிக மன்றத்தினால் நடத்தப்படுகின்ற தொடர் விரிவுரைகளில் இன்று நடைபெறவிருந்த ''நவீன அரங்கின் தன்மை'' என்ற தலையங்கத்திலான விரிவுரை பிறிதொரு தினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வலயம் ஒன்று பாடசாலைகளுக்கு இடையில் தமிழ்த் தினப் போட்டிகள் நடைபெறுவதையொட்டியே விரிவுரை பின்போடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

# கண்ணீர் அஞ்சலி

## திருமதி விஜயராணி கந்தசாமி

எமது தர்மகர்த்தா சபையின் செயலாளர்
**வ. கந்தசாமி அவர்களின்**

பாசமிகு மனைவியாரின் மறைவு குறித்து அவரின் குடும்பத்தவரின் துயரத்தில் பங்குகொள்வதுடன் அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி அன்னாரின் ஆத்ம சாந்திக்காவும் பிரார்த்திக்கின்றோம்.

**வண்ணை விஸ்வலிங்க மகாகணபதி கோயில் தர்மகர்த்தா சபை.**

((55812)

# கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தில் பணியாற்றுகின்ற
**செல்வி தி. வசந்தா அவர்களின்**
தந்தையார்

## தியாகராஜா

அவர்களின் திடீர் மறைவால் துயரடைந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும், கண்ணீர் அஞ்சலியையும் தெரிவித்துக்கொள்கின்றோம.

பணிப்பாளர்கள், விரிவுரையாளர்கள்,
போதனாசிரியர்கள், ஊழியர்கள்,
**I. I. S.,**
**68, Clock Tower Road.**
**Jaffna.** (சி/ 3676)

# மரண அறிவித்தல்கள்

செல்வன்
## ராஜகாந்தன் ரஜனிகாந்

அம்பனை, தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட ராஜகாந்தன் ரஜனிகாந் பிரான்ஸில் அகாலமரணமானார்.

இவர் ராஜகாந்தன் – தேவி தம்பதிகளின் மூத்த புதல்வனும், அசோக்காந், ஜெயக்காந் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற பொன்னையா, பொன்னம்மா ஆகியோரின் பேரனும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ. சமரக்கொடி
(மாமன்)
இல.24, கல்லூரி வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

## ஐயாத்துரை பஞ்சலிங்கம்

(ஓய்வுபெற்ற இ. போ. ச. சாரதி)

உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் ஏழாலை மேற்கை வதிவிடமாகவும் கொண்ட ஐ. பஞ்சலிங்கம் 01 – 05 – 98 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை தங்கமுத்துவின் அன்பு மகனும், இளையதம்பி சேதுப்பிள்ளையின் அன்பு மருமகனும், நடராசாவின் அன்புச் சகோதரனும், செல்லம்மாவின் அன்புக் கணவரும், புஸ்பராணி (கனடா), செல்வராஜா (C.T.B), விபுலானந்தராஜா (கனடா), ரவீந்திரராஜா (ஜேர்மன்), வனஜாராணி (ஜேர்மன்), மனோகரன் (ஜேர்மன்), கிரிஜா (ஜேர்மன்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும்; கந்தசாமி, விமலாதேவி, சரோஜா, ஜெயந்திமாலா, சந்திரலிங்கம், விஜயகுமாரி, கனகலிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும், ரஜி, ஜெனா, விஜி, தர்ஷி, சுஜி, கிரீசன், கலாபன, வினோ, விரோஜா, ஜெயன், நிரோஷன் அனோஜா, பிறேன், மதன், சஜூஜா, மிரோணிகா, ஜீனகா, ஸ்ரீபன், அனிற்றா, சபீனா, ஆபிராம் ஆகியோரின் அன்புப் பேரனாரும், சுபானா, சேஷிகா, சரணிகா, அபிஷேக், விதுஷேக், டிலெக்சனா ஆகியோரின் அன்புப் பூட்டனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 07-05-98 இன்று வியாழக்கிழமை 2 மணியளவில் ஏழாலையில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
A. P. செல்வராஜா (மகன்)
(இ. போ. ச)
மில்லேன்,
ஏழாலை மேற்கு. (55808)

உ

ஸ்ரீ காமாட்சி அம்பாள் துணை ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நம!

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான வெகுதானிய வருடம் சித்திரை மாதம் 25 ஆம் நாள் [08-05-1998] வெள்ளிக்கிழமை காலை 6.45 மணி முதல் 8.10 மணி வரையுள்ள இடபலக்கின சுபமுகூர்த்தவேளையில்

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
**சுபாகரன்**
[ஜேர்மனி]
அவர்களுக்கும்



எமது புத்திரி
திருநிறை செல்வி
**பிரபா**
அவர்களுக்கும்

வண்ணை ஸ்ரீ காமாட்சிஅம்பாள் திருவருளால் திருமணம் நடத்தப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு திருமணம் மாலிசந்தி விநாயகர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்பு உபசாரம் சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு மணமகன் இல்லத்தில் நடைபெறும்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி இ. சின்னத்துரை பத்தர்,
No: 5, கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.
திரு. திருமதி சி. தயாகரன் [ஜேர்மனி]
திரு. திருமதி இ. சிவராஜன் [மன்னார்]

திரு. திருமதி ந இராசதுரை பத்தர்
மாலி சந்தி, அல்வாய் தெற்கு,
அல்வாய்.

(55804)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜா, யாழ்ப்பாணம்.

பல வருடங்களுக்குப் பின் மீண்டும் ஆரம்பம்!

சினிமா ரசிகர்களின் ஆவலைத் தீர்க்க ராஜா டாக்கீஸ் அகண்ட வெண் திரையில் நிறைந்த ரசிகர் கூட்டத்துடன் காட்சி அளித்துக்கொண்டிருக்கின்றது.

முன்னாள் தமிழக முதல் அமைச்சர்கள் மக்கள் திலகம் M.G.R., ஜெயலலிதா நடித்த—

ஜெமினி தயாரிப்பிலும் இலங்கையில் S. T. R. பிலிம்ஸ் பெருமையுடன் திரையிட்ட —

# ஒளி விளக்கு

M.G R. இன் 100 ஆவது படம்

தினசரி புதிய நேரம்:- 1.45, 4.45 மணி
சனி, ஞாயிறு காலை 10.00 மணிக்கும்
காட்சிகள் காண்பிக்கப்படும்.



# Navalar Education Centre

Anaipanthy, Jaffna.

SPOKEN ENGLISH
With
GRAMMAR

by: Mr. M A. HARI
( B A, Dip. in Eng. )

அனேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க
பிரிவு II ஆரம்பம்:- 11 - 05 - 98

Mon
Wed ]— 4.00 — 5.00 p m.

★ அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளதால் முன்கூட்டியே பெற்றுக் கொள்ளலாம்.

(55815)



# ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்

பக்தர்கள் ஞாயிற்றுக்கிழமை காலை திருவிழாவிற்குச் செல்ல தொடர் பஸ் சேவையும் மாலை வீடு திரும்ப தொடர் பஸ்சேவையும்.

ஞாயிற்றுக்கிழமைகளில் யாழ்ப்பாணம், சாவகச்சேரி, கொடிகாமம் பஸ்களில் வரும் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் பக்தர்களுக்கு தேவஸ்தானம் பின்வருமாறு வரும் (10—05—98) ஞாயிற்றுக்கிழமை முதல் பஸ் சேவையினை ஒழுங்கு செய்துள்ளது

பருத்தித்துறையில் இருந்து காலை 9. 00 மணிக்கு பஸ் வல்லிபுர ஆழ்வார் கோயில் நோக்கி மந்திகை பஸ்தரிப்பு நிலையம் வந்து, மந்திகை ஆஸ்பத்திரி முன் உள்ள வீதியால் புலோலி வீதி சென்று ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயிலை சென்றடையும். மேல் உள்ள பஸ்களில் வரும் பக்தர்கள் யாவரும் மந்திகை பஸ் தரிப்பு நிலையத்தில் இறங்கி நின்றால் பருத்தித்துறையில் இருந்து காலை 9. 00 மணிக்குப் புறப்படும் பஸ் மூலம் கோயிலைச் சென்றடையலாம். விரும்பின் காலை 9. 00 மணிக்கு முன் பருத்தித்துறை சென்றும் அதே பஸ்ஸில் கோயிலுக்குச் செல்லலாம்.

மாலையில் நீங்கள் வீடு திரும்ப பருத்தித்துறையில் இருந்து 2. 00 மணிக்கு ஒரு பஸ் புறப்பட்டு முன் கூறிய அதே வழியால் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயிலை வந்தடையும்.

பக்தர்களை ஏற்றிய பின் கோயிலில் இருந்து 2. 30 மணிக்குப்புறப்பட்டு மந்திகை பஸ்தரிப்பு நிலையம் வந்து பருத்தித்துறையைச் சென்றடையும், பக்தர்கள் மந்திகையில் இறங்கி, அல்லது பருத்தித்துறை சென்று தாங்கள் செல்ல விரும்பும் பஸ்களில் ஏறி தங்கள் வீடுகளைச் சென்றடையலாம்.

ச. தேவதாசன்
செயலாளர்.

தர்மகர்த்தா சபை,
ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்.

(55809)



# சுவீற்ஸ் மேக்கர் உடன் தேவை

தகுதியானோர் நேரில் தொடர்புகொள்ளவும்.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

# குலம் கிறீம் ஹவுஸ்,

226, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.


## நீடிப்பு

யாழ்ப்பாணம், மே 7

போக்குவரத்துச் சபை பஸ்களுக்கான பருவகாலச் சீட்டுக்களை வழங்குவது நாளை வரை நீடிக்கப்பட்டுள்ளது என்று வடபிராந்திய போக்குவரத்துச் சபைப் பொதுமுகாமையாளர் வி, எஸ். சொக்கலிங்கம் தெரிவித்தார்.

பருவ காலச் சீட்டு வழங்கும் பணி கடந்த 5 ஆம் திகதியுடன் முடிவடைவதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது என்றும் அவர் தெரிவித்தார். (உ-3)

## நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், மே 7

வடக்கு—கிழக்கு மாகாண பொதுச் சேவைக்கு விஞ்ஞான, கலை, வர்த்தக பட்டதாரி ஆசிரியர்களை சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 14 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை நடைபெறவிருக்கிறது.

யாழ். வலயம் ஒன்று அலுவலகத்தில் நடைபெறும் இந்த நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளோர் அழைப்புக் கடிதத்தில் கேட்கப்பட்டுள்ள ஆவணங்களுடன் 31 – 3 – 98க்கு முந்திய ஆறு வருடங்களில் 3 வருடங்களாவது வடக்கு — கிழக்கு மாகாணத்தில் நிரந்தரமாக வசிப்பதை உறுதிப்படுத்தும் வாக்காளர் பட்டியலையும் கொண்டு வருமாறு வலயம் ஒன்று கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (உ-3)

## விபத்தில்..

(முதலாம் பக்கத் தொடர்)

டார் சைக்கிளில் வந்தபடையினருடன் லொறியொன்று மோதிக் கொண்டதில் படுகாயமடைந்த பலாலி இராணுவ முகாமைச் சேர்ந்த எம். எஸ். நவரட்ண கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டு இராணுவ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அங்கு மரணமானார் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

## 21 பொலிஸாருக்கு..

(முதலாம் பக்கத் தொடர்)

டார்.

சந்தேக நபர்கள் மூன்று மாத காலம் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களை பிணையில் விடுவிக்குமாறு அவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி எம். எம். சாலி விண்ணப்பித்தார்.

பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் ஆஜரான மனித உரிமை நிறுவனத்தைச் சேர்ந்த சட்டத்தரணிகள் எஸ். இரட்ணவேல், எம். கே. செல்வராசா ஆகியோர் பிணை அனுமதி வழங்கப்படுவதை ஆட்சேபித்தனர்.

''சந்தேக நபர்கள் மீது இன்னமும் வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை. இவர்கள் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படும் பட்சத்தில் அவர்கள் ஆயுள் தண்டனை அல்லது மரண தண்டனை பெறுவார்கள். இத்தகைய குற்றம் புரிந்தவர்களுக்கு மேல் நீதிமன்றம்தான் பிணை வழங்க முடியும்'' என்று அவர்கள் தெரிவித்தனர்.

இதையடுத்து சந்தேக நபர்களைத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (உ-3)

## புலிகள்..

(முதலாம் பக்கத் தொடர்)

கடந்த 3 ஆம் திகதி விடுதலைப் புலிகள் தாக்குதல் தவிர்ப்பை அறிவித்தபோது அதற்கு உடன்பட்டு தாக்குதல்தவிர்ப்பை உறுதிப்படுத்த இலங்கை அரசு தவறிவிட்டது.

இந்நிலையில் புலிகள் நேற்று நடத்திய தாக்குதல், மோதல் தவிர்ப்பு மீறல் என்று கருதமுடியாதுள்ளது. இப்படி [illegible] தெரிவித்தார். (உ-3-10)

# பேச்சு நடத்தக் கோரி 'புளொட்' பிரேரணை

## பிரதேச சபையில் முன்னறிவித்தல்

யாழ்ப்பாணம், மே 7

''விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மீது விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட வேண்டும். அரசு உடனடியாகப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும்.''

இவ்வாறு அரசாங்கத்தைக் கோரும் பிரேரணை ஒன்றை நிறைவேற்றுவதற்கான முன்னறிவிப்பை வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபைக் கூட்டத்தில் ''புளொட்'' அமைப்பு முன்வைத்துள்ளது.

வடமராட்சி தென்மேற்குப் பிரதேச சபையின் முதலாவது கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. புளொட்டின் ஜனநாயக மக்கள் விடுதலைமுன்னணி சார்பில் தேர்தலில் தெரிவான உறுப்பினர்களின் குழுத் தலைவர் கந்தப்பு ஜெயராசா மேற்படி பிரேரணைக்கான முன்னறிவிப்பை அக்கூட்டத்தில் விடுத்தார்.

முன்னறிவித்தல் செய்யப்பட்ட பிரேரணைகளில் ஏனைய முக்கிய விடயங்கள் வருமாறு:-

★ தந்தை செல்வா நினைவாக நினைவுத் தபால் தலை வெளியிடுதல்.

★ உள்ளூராட்சி நிர்வாகங்களில் வெளியாரின் தலையீடுகளைத் தடுத்தல்.

★ உள்ளூர் விவசாய உற்பத்திப் பொருள்களுக்குக் கொழும்பில் சந்தை வாய்ப்பை ஏற்படுத்துதல். (ஐ)

# ஜப்பானில் நேற்று 19 இலங்கையர் கைது!

கொழும்பு, மே 7

இலங்கையைச் சேர்ந்த 19 பேர் தெற்கு ஜப்பானில் டாடா நகரில் பஸ்தரிப்பு நிலையம் ஒன்றில் வைத்து ஜப்பானிய பொலீஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

பஸ் தரிப்பு நிலையம் ஒன்றில் இவர்கள் நிற்பதை அவதானித்த ஜப்பானியர் ஒருவர் கொடுத்த தகவலை அடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் —

கைது செய்யப்படும் போது அவர்களிடம் கடவுச்சீட்டோ அல்லது வேறு தகுந்த பயண ஆவணங்களோ இருக்கவில்லை என்றும் — தெரிவிக்கப்பட்டது.

எவ்வாறு அவர்கள் ஜப்பானுக்குள் நுழைந்தார்கள் என்பது தொடர்பாகப் பொலீஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (உ-3-6)

# கைதான போராளிகளை விடுவிக்கக் கோரிக்கை

லண்டன், மே 7

கடந்த பெப்ரவரி மாதம் இந்தியாவின் கிழக்குத் தீவான அந்தமானுக்கு அப்பால் ஆயுதங்கள் நிரம்பிய கப்பல் ஒன்றிலிருந்து இந்தியா 70 - க்கும் அதிகமான தனது போராளிகளைக் கைது செய்துள்ளதாக பர்மாவின் அர்க்கான் வட்டகையின் முக்கிய பிரிவினைவாதக் குழு ஒன்று குற்றஞ்சாட்டி உள்ளது.

இந்தப் போராளிகளை விடுதலை செய்யும் படி இந்தியாவை அது வேண்டியுள்ளது.

இந்தக் கப்பல் இந்தியாவின் வடகிழக்கிலுள்ள கிளர்ச்சிக்காரர்களுக்கு ஆயுதங்கள் கொண்டு சென்றதாக இந்திய பாதுகாப்பு அமைச்சு முன்னர் தெரிவித்திருந்தது.

இந்தக் கப்பல் பர்மாவின் இராணுவ ஆட்சியை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கும் அர்க்கான் கிளர்ச்சிக்காரர்களுக்கே ஆயுதங்களைக் கொண்டு சென்றதாகவும் —

இந்தியாவுக்கு எதிரான பகைமை நோக்கம் எதுவும் கிடையாது என்றும் அர்க்கான் பாதுகாப்புக்கட்சி இந்தியப் பாதுகாப்புஅமைச்சர் ஜோர்ஜ்பெர்னாண்டஸுக்கு அண்மையில் எழுதிய கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளது. (இ-8)

## ஐ.நா.செயலரின்..

(முதலாம் பக்கத்தொடர்)

இவர்களுடன் வவுனியா சுகாதார அதிகாரியும் தமது வாகனத்தில் சென்றுள்ளார்.

இன்று அவர் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் விரிவாகப் பேச்சு நடத்திய பின்னர் மாலையில் வவுனியா திரும்புவார் என எதிர்பார்க்கப்பட்டது.

(உ-3-164)

# இன்று யாழ். விஜயம்

யாழ்ப்பாணம், மே 7

பனம்பொருள் அபிவிருத்திச்சபை தலைவர் மு. பாக்கியநாதன் யாழ்ப்பாணத்திற்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இன்று வருகிறார். (உ-3)


தரமான புளொக் தயாரிப்பதற்கு நாடவேண்டிய இடம்



# அருண்

புளொக் தயாரிப்பாளர்

அத்துடன்

குறைந்த கட்டணத்தில் தரமான முறையில்

O போட்டோ பிரதிகள்
O அடையாள அட்டை கவரிடுதல் (LAMINATION)

361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 7-5-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org